Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 | யாழ்ப்பாணம், சுபகிருது சித்திரை 30ஆம நாள் | துல்ஹஜு 8 | (13-5-62) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 91

பட்டு, பருத்திப் பிடவைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

டயருமஸ்

மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

# இரு மந்திரிகள்-எம். பி.

# பேச்சு வார்த்தை

## நெடுந்தீவு பஸ் சேவை உருவாகிறது

### குறிகாட்டுவானில் 1500 அடி நீள பாலம் அமைக்கப்படும்

கொழும்பு, சனி

நெடுந்தீவு மக்களின் பிரயாணக் கஷ்டத்தை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவுக்கும் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயக்கா, போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல ஆகியவர்களுக்கு மிடையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நெடுந்தீவில் பஸ் போக்குவரத்தொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று திரு. கந்தையாவின் பிரேரணையை அரசாங்கம் நேற்று முன்தினம் பார்லிமெண்டில் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது.

நெடுந்தீவு மக்கள் புங்குடு தீவுக்குள்ளாக வருவதற்காக குறிக்காட்டுவானில் 1500அடி நீளமுள்ள பாலமொன்றை அமைப்பது அரசாங்கத்தின் முதல் வேலையாகவிருக்கும். இப் பகுதியின் போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்காக இவ்வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து பாலம் அமைப்பதற்கான செலவு பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த வருடமே பாலம் அமைக்கும் வேலையை ஆரம்பித்து தொடர்ந்து முடித்து வைக்கப்படுமென திரு. பண்டாரநாயக்காவும், திரு. கலுகல்லையும் பேச்சுவார்த்தைகளின் போது உறுதியளித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

நிதிமந்திரியுடன் நடைபெற்ற இம் மகாநாட்டுக்குப் பின்னர் திரு. கந்தையாவுக்கும், மராமத்து இலாகா அதிகாரிகளுக்கு மிடையில் போக்குவரத்து மந்திரி காரியாலயத்தில் மற்றொரு மகாநாடும் நடைபெற்றது. பாலம் அமைக்கும் வேலை சம்பந்தமாகவே இங்கு ஆராயப்பட்டது.

நெடுந்தீவுக்கு பஸ் போக்குவரத்து வேண்டுமென திரு. கந்தையா கொண்டுவந்திருந்த பிரேரணைக்குப்பதிலளித்த நிதி மந்திரி திரு. பண்டாரநாயக்கா 'விரைவில் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேற்றுமுன்தினம் பார்லிமெண்டில் உறுதியளித்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

★ ஈழநாடு 13—5—62 ★

## தமிழ் ராஷ்டிரபதி

முன்காலத்திலே பாரதநாட்டில் மன்னரை நியமிக்க சில சமயம் பட்டத்து யானையை மாலையுடன் அனுப்புவது வழக்கமாம். யானை சென்று யாருடைய கழுத்திலே அந்த மாலையைப் போடுகிறதோ அவரே தங்கள் அரசரென்று மக்கள் ஒப்புக்கொள்வரென்று பல கதைகளில் படித்திருக்கிறோம்.

இது எப்படியாயினும், இக்காலத்தில் நாட்டின் தலைவரைத் தெரிவு செய்ய யானை அல்லது பூனையின் உதவியை யாரும் நாடுவதில்லை. மக்களின் சம்மதத்தைக் கேட்காமலே சில நாடுகளில் இராணுவ பலத்தை நம்பி, சிலர் "நானே தலைவன், நானே அரசன்" என்று பிரகடனம் செய்து கொண்டு தர்பார் நடத்துவதையும் பார்க்கிறோம். ஆனால் பாரத நாட்டிலே அப்படியின்றி, ஜனநாயக முறையிலே, மக்களே, தங்களின் புதிய தலைவராக டாக்டர் சர்வபள்ளி ராதா கிருஷ்ணன் அவர்களை அமைதியாகத் தெரிவு செய்திருப்பதைப் பார்க்கின்றோம்.

புதிய ராஷ்டிரபதி ராதா கிருஷ்ணனைப் போன்ற அறிவும், ஆற்றலும் வாய்ந்த கண்ணியமிக்கவர், தலைவராகக் கிடைப்பது எந்த நாட்டுக்கும் அரிது. உலக நாடுகளிலே பெருமதிப்பு பெற்ற டாக்டர் ராதா கிருஷ்ணன் ஒரு தமிழர். தாய் மொழி தெலுங்காயினும், தமிழ் நாட்டிலே தமிழ்ப் பண்புடனே பிறந்து வளர்ந்த பெரியார். உலகிலேயே ஒரு பெரிய ஜனநாயக நாட்டுக்கு, அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளது, சிறப்பாக தமிழ் கூறும் நல்லுலகு அனைத்துக்கும் பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனும் தமிழ் வேதவாக்கை உள்ளத்தில் கொண்டவர் புதிய ராஷ்டிரபதி. அவர் நம் ஈழத்தின் நல்ல நண்பர். இங்கு பன்முறையும் விஜயம் செய்து பல அரிய சொற்பொழிவுகள் ஆற்றி இங்கு பொது மக்களின் அன்பையும் நன் மதிப்பையும் அமோகமாகப் பெற்றுள்ளார். ஈழநாடும் பாரத நாடும் நட்புறவு கொண்டு முன்னேறவேண்டுமென்பதில் அதிக ஆர்வமுள்ளவர். அவர் ராஷ்டிரபதியாக இருக்கும் காலத்தில் இலங்கை-இந்திய பிரச்சினைகள் நல்லபடியாகத் தீர்ந்து இருதேச மக்களின் நல்லுறவும் பரஸ்பர நன்மைக்கானமுறையில் வளர்ந்தோங்குமென்றே நம்புவோம். நாற்பத்து முக்கோடி மக்கள் வாழும் மகத்தான பாரத நாட்டுக்கு ஜனாதிபதியாக இன்று பதவி ஏற்கும் தமிழரான டாக்டர் ராதா கிருஷ்ணனுக்கு ஈழநாட்டின் சார்பாக நமது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## புதிய ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் இன்று பதவியேற்கிறார்

புதுடில்லி, மே 12.

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக மிகப்பெருபான்மையான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் இன்று பதவியேற்கிறார்.

புதிய ராஷ்டிரபதி தேர்தல் முடிவுகள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு 5,53,067 வாக்குகளும் அவருடன் போட்டியிட்ட திரு சௌத்திரி ஹரிராமுக்கு 6,341 வாக்குகளும் திரு யமுனபிரசாத் திரு சூலியாவுக்கு 3537 வாக்குகளும் கிடைத்தன.

இன்று புதிய ஜனாதிபதியாகம் பதவியேற்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் பதவியேற்ற பின் முதல் செய்யும் பணி பதவியிலிருந்து விலகிய டாக்டர் ராஜேந்திர பிரஸாத்துக்கு 'பாரதரத்ன' பதக்கம் வழங்குவது தான்.

## உதவி வித்தியாதிபதி இடமாற்றம்

மட்டக்களப்பு, சனி

கடந்த ஒருவருட காலமாக கிழக்குமாகாண உதவி வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய திரு. அங்வோ இராஜகாரியர் ஜுன் மாதம் முதலாம் திகதியோடு, திருக்கோணமலை மாவட்டத்திற்கு கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கொழும்புப்பகுதியைச் சேர்ந்த, திரு. நாகொடவிதான என்பவர், ஜுன்மாதம் முதல் கிழக்குமாகாண உதவி வித்தியாதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## உடுப்பிட்டியில் மக்கள் வங்கி

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டித் தொகுதியில் பெரும்பான்மையான மக்கள் விவசாயிகளாகவும், சிறு வியாபாரிகளாகவும் இருப்பதால் அவர்கள் தங்கள் முதலீடுகளுக்கு வேண்டிய பணம் கடும் வட்டிக்கே பெற வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுவதாலும் இங்கு மக்கள் வங்கி ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டும் பிரேரணைகள் இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களில் விரைவில் விவாதிக்கப்படும்.

இதுபற்றி தனிப்பட்டமுறையில் சிலர் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே. டீ. ஆர்னல்டையும், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தையும் பேட்டிகண்டுள்ளனர்.

## சுவாமி விவேகானந்தர் பிறந்த தினம்!

கொழும்பு, ஞாயிறு

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகியோரின் பிறந்த தின ஆண்டுவிழா இராமகிருஷ்ண இயக்கத்தின் இலங்கைக்கிளையினரால் கொழும்பில் நேற்றைய தினமும் இன்றும் கொண்டாடப்படுகின்றது. கூட்டுப்பிரார்த்தனைகளும் பல பெரியார்களின் சொற்பொழிவுகளும் விழாவில் இடம்பெற்றுள்ளன. இம்மாதம் 20-ம் திகதியன்று இதையொட்டி ஒரு அன்னதான உபசாரமும் வழங்கப்படவிருப்பதாகத்தெரிகிறது.

பட்டு, பருத்திச் சேலை வகைகளுக்கும் றெடிமேட் உடைகளுக்கும்

டொலறும்ஸ் - TOLARAMS

ஒரு முறை விஜயஞ் செய்யுங்கள்!

46, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 30-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (13-5-62) முதல் வைகாசித் திங்கள் 6-ம் நாள் சனிக்கிழமை (19-5-62) வரை உள்ள பலன்கள்.

## மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் பாதம்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு இருவித பலன்களும் அநேகமாக கலந்து நடக்கும். மகிழ்ச்சி, தேகநலம், இலாபம், சுப கொண்டாட்டங்கள் ஆகியனவும் அனுவசிய அவப்பேர் கேட்டல், நண்பர் முதலியோருடன் பகை, தேக நலக் குறைவு, சஞ்சலம் ஆதியனவும் காணப்படுகின்றன. குடும்ப சந்தோஷம், சமுதாய மதிப்புயர்ச்சி, எதிர்பாராதமுறையில் செலவு அதிகரிப்பு, சிறிய விடயங்களிலும் எதிர்ப்பு, சொத்துக்களில் நட்டம், உத்தியோகத்தருக்கு பதவி உயர்ச்சி இருக்குமாயினும் இடையிடை சிற்சில கஷ்டங்களும் சிறிய ஊழியரால் ஏற்பட இடமுண்டு. உத்தியோக முயற்சியிலீடுபட்டோருக்கு நன்மையும், மாணவருக்குக் கல்வியில் வித்தியாபிவிருத்தியும், பெண்களுக்கு நண்பர் ஆதரவு, பண வரவு ஆதியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 13, 15, 17, 19-ந் திகதிகள் சுப தினங்களாகும்.

★

## இடப இராசி

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய.)

இவ்வாரத்தில் இவர்களுக்கு எதிரிகளால் கஷ்டம், நட்டங்கள், விரும்பத்தகாத மாற்றங்கள், சச்சரவுகள், தேக நலக் குறைவுகள், பிரயாணங்கள் காணப்படுகின்றன. முயற்சிகளில் தடைகள், கண் - வயிறு சம்பந்தமான ரோகங்கள், குடும்பத்தில் கஷ்டமும் சச்சரவும், வரவுக்கு மீறிய செலவும், சொத்துக்களால் வருவாயும், கமத்தொழிலில் நட்டமும் பிரயாணக் கஷ்டமும், சொத்துத் தகராறுகளும், வழக்குகளும், உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளின் அவமதிப்பு, தொழிலில் ஊக்கம் குன்றுதல், பலவித கஷ்டங்களும் ஏற்படல் வர்த்தகத்துறையில் நல்ல அபிவிருத்தி கிட்டுதல், ஆதாயம் கிடைத்தல், (வர்த்தகத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும்) மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு பொதுவாக நற்பலன்களும், சுப கருமங்கள், பண வரவு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 16, 19 சுப தினங்களாகும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு முயற்சிகளில் வெற்றி, சொத்துக்களால் இலபம், சந்தோஷ வாழ்வு, பொருள்கள் கிட்டுதல், பொருள் வரவு, இனசனத்தால் கஷ்டங்கள், தாயாதிகளால் வரும் கஷ்டங்களால் சஞ்சலங்கள், நட்டங்கள் ஆதியன காணப்படுகின்றன. தேக சுகம் சுமாராகவும், குடும்ப சுகம் பாதிக்கப்பட்டும் இருக்கும். சொத்துக்களால் வருவாயும் கமத்தொழில் இலாபமும், கால்நடைப் பெருக்கமும், உத்தியோகத்தருக்கு பொதுவாக சுமாரன பலன்களும் முயற்சியுடையோருக்கு உயர்ச்சியும், வர்த்தகத்துறையில் அதிகமான வியாபார விருத்தியும், மாணவருக்கு கல்விச் சிறப்பும் பெரியோர் உதவியும் பெண்களுக்கு ஆடம்பரச் செலவு அதிகரிப்பும், சங்கீதம் போன்ற கலைகளை அப்பியசிப்போருக்கு நன்மையும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 15, 19 சுப தினங்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு விரும்பியவற்றில் முயற்சி வெற்றியும், ஆடம்பரப் பொருள்கள் கொள்வனவும் இலாபம், புதிய பதவிகள், புகழ், பொதுச் செல்வாக்கு ஆதியனவும் தூரப் பிரயாணங்களும் காணப்படுகின்றன. பிரயாண விடயத்தில் அவதான மெடுக்குக. விபத்துக்கும் இடமுண்டு. குடும்பத்தில் வைத்தியச் செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதியிருக்கும். பண நிலையில் பொது முன்னேற்றம் காணப்படும். சொத்துக்கள் சேர்வனவு - விற்பனவு விடயத்தை ஒத்திவைக்குக. கமத்தொழில் அபிவிருத்தி வேலைகளை தற்சமயம் தவிர்த்து வழக்கமான வேலைகளைக் கைக்கொள்வது செலவைத் தவிர்க்கும். உத்தியோகத்தருக்கு உத்தியோக உயர்வு, மேலதிகாரிகளிடம் நற்பெயர், பொருள் வரவு, மதிப்பு உயர்தல், வர்த்தத் துறையில் ஆதாயம், தொழில் விருத்தி, மாணவருக்கு வித்தைச் சிறப்பு, வாக்கு வன்மை, முதியோர் உதவி, பெண்களுக்கு நண்பரால் இலாபம், சமுதாயத்தில் புகழ், விவாக சுபகருமங்கள் நடத்தல், ஆடம்பரச் செலவு ஆதியன காணப்படுகின்றன. பெண்களுக்கு கட்டுபாடுவேண்டும். இவர்களுக்கு மே மாதம் 15,16, 19 சுபதினங்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம் உத்தரம், 1-ம் பாதம் முடிய.)

இவ்வாரத்தில் இவர்களுக்கு முயற்சிகளில் வெற்றி, நல்ல நண்பர் சேர்க்கை, எதிரிகளை வெற்றி கொள்ளல், காரிய விருத்தி, வித்தைச் சிறப்பு, கொண்டாட்டங்கள், குடும்பத்தில் சிறிய சச்சரவுகள், பண ஆதாயம், சொத்துக்களால் நன்மைகள், சொத்து சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுதல், (கொள்வனவு, விற்பனவுக்கு நன்மையான காலம்) கமத்தொழிலில் தாயாதிகளால் சொத்துத் தகராறுகள் ஏற்பட்டவர்களுக்கு விவகார வெற்றி, நன்மையான பலன்கள், உத்தியோகத்தருக்கு நற்பெயர், மதிப்புயர்தல், வர்த்தகத்தில் சராசரிக்கு அதிகமான வரவு, தொழிலபிவிருத்தி, ஊழியர் உதவி, மாணவருக்கு வித்தைச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, கணவருக்கு நலம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 16, 17 சுபதினங்களாகும்.

★

## கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை)

இவ்வாரத்தில் இவர்களுக்கு நற்பலன்களதிகமாகக் காணப்படுகின்றன. நண்பர் - பெரியோர் - இனத்தவருடன் சச்சரவுகளும் பகைமையும், நீசர் தொடர்பு, தேக நலம் பாதிக்கப்படல், நட்டம், விபத்துக்களால் கஷ்டம், முயற்சிகளில் தடைகள், கஷ்ட பிரயாணங்கள், வீண் வம்பு வழக்குகள், குடும்பத்தில் வைத்தியச் செலவு அதிகரித்தல், (குடும்பத்தில் உள்ளவர்களுடனும் வெளியிலும் நிதானம் வேண்டும்) செலவுஅதிகரித்தல், கடன் படல், சொத்துக்களால் கஷ்டமும், பொருள் நட்டமும், கமத்தொழில் நட்டம், தாயாதிகளால் இத்துறையினருக்கு கஷ்டம், (கொள்வனவு தவிர்க்குக.) உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு தாம் செய்த வினைகளுக்குப் பலன்களை அனுபவிக்க நேருதல், கஷ்ட கருமங்கள் நடத்தல், மதிப்புயருதல், மாணவருக்குக் கல்வியில்சோம்பல், பெண்களுக்கு குணநலம், குடும்பத்தில் சச்சரவு, ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 15, 19 சுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்வாரத்தில் இவர்களுக்கு எதிரிகள் வீழ்ச்சி, முயற்சிகளால் வெற்றி, இலாபம், சொத்து சேர்க்கை, சுபிட்சம், வருமானம் அதிகரித்தல், கல்வி விருத்தி, பெரியோர்கள் பாராட்டு, செல்வாக்கு விருத்தி, மாணவருக்கு பரீட்சை வெற்றி ஆதியன காணப்படுகின்றன. குடும்ப நிம்மதி சற்று குலையும், பண நிலைமையில் திருப்திகரமாக இருக்கும். சொத்து விஷயத்தில் வழமையான வேலைகளைக் கையாள்வது நலந்தரும். உத்தியோகத்துறையில் கடும் உழைப்பு, மேலோரைத் திருப்தி செய்வதில் கஷ்டம், வர்த்தகத் துறையில் மத்திய பலனுண்டு. பெண்களுக்கு நன்மையான வாரமாகும். இவர்களுக்கு மே மாதம் 13, 14, 16, 19 சுபதினங்களாகும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை.)

இவ்வாரத்தில் இவர்களுக்கு முயற்சிகளால் வெற்றி, வருமானம் அதிகரிப்பு, செல்வாக்கு விருத்தி, எதிர்ப்பு ஒழிதல், போட்டி மறையும், தேகாரோக்கியம், நண்பர் சேர்க்கை, சஞ்சலம், பிரயாணம் ஆதியன காணப்படுகின்றன. சொத்துக்களால் இலாபமும் மூலதனம் முடக்கப்படுவது ஆதாயமாக இருப்பதும் கமத்தொழிற் துறையில் சொத்து சேர்க்கை, வர்த்தகத்துறையினருக்கு தொழில் மேன்மை, நாணய விருத்தி, ஆதாயம், மாணவருக்கு கல்வி விருத்தி, பெண்களுக்கு சுப பிரயாணங்கள், வாழ்க்கையில் மகிழ்ச்சி ஆதியன காண்ப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 13, 15, 17, 19 சுபதினங்களாகும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) இவ்வாரத்தில் இவர்களுக்கு நற்பலன் குறைவாகநடக்கும். இனசனம், எதிரிகளால் இடர்கள் விளைதல், பண நட்டம், மனச் சஞ்சலம், முயற்சிகளில் தோல்விகள், கஷ்ட பிரயாணங்கள், விரும்பத்தகாத மாற்றங்கள், சச்சரவுகள், அபிப்பிராய பேதங்கள் ஏற்பட இடமுண்டு. குடும்பத்திலும் சுகயீனம் காரணமாக செலவினம் அதிகரிக்கும். குடும்பத்தினுள் நிம்மதியீனமும்சச்சரவும்காணப்படும். உத்தியோகத் துறையினருக்கு கஷ்டங்கள், மேலதிகாரிகளின் கண்டனங்கள், ஊழியரால் இடர்கள், மாணவருக்கு வித்தைக் கஷ்டம், பெண்களுக்கு கஷ்டமான காலமாகவும், ஏமாற்றம், குடும்ப சுகக்குறைவு ஆதியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 19-ந் திகதிகள் சுபதினங்களாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின் முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை)

இவ்வாரத்தில் இவர்களுக்கு முயற்சிகளில் வெற்றி, சந்தோஷம், ஆதாயம், தேகாரோக்கியம், எதிரிகள் அழிவு, போட்டி மறைவு, செல்வாக்கு விருத்தி, சுபகருமங்கள் நடத்தல் ஆதியன காணப்படுகின்றன. பண நிலைமையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு. சொத்துக்கள் சாதாரணமாக பலன் தரும். உத்தியோகத் துறையினருக்கு பரீட்சைகளில் வெற்றி, நேர்முகப் பரீட்சைகளில் சித்தி, பதவி உயர்ச்சி, மாணவருக்கு பணச் சிறப்பு, போட்டிப் பரீட்சை வெற்றி. கமத்தொழிலில் மத்திமபலிதம், வர்த்தகத்துறையில் தொழில் விருத்தி, நாணயம், பணவரவு, பெண்களுக்குக் குடும்ப நலம். பொருள் வரவு செய்காரிய சித்தி ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 15, 19 சுப தினங்களாகும்.

★

## கும்ப இராசி

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய).


இவ்வாரத்தில் இவர்களுக்கு நல்ல நண்பர் சேர்க்கை, ஆதாயம், எதிர்ப்பு மறைதல், மகிழ்ச்சி, பெயர், புகழ் பரவுதல், தேகநலம் சிறிது பாதிக்கப்படல், குடும்பத்தில் நிம்மதி, பண நிலைமையில் சிறிது கஷ்டம், சொத்துக்கள் விஷயத்தில் அபிவிருத்தி, ஆதாயம், கமத்தொழிலில அபிவிருத்தி, சொத்து சேர்க்கை, கால்நடைலாபம், உத்தியோகத்துறையினருக்கு மத்திமபலிதம், வழமையான சூழ் நிலைமையில் நடவடிக்கை, மாணவருக்கு வித்தைச் சிறப்பு, பெண்களுக்கு செல்வாக்கு பரீட்சைகள் வெற்றி, உத்தியோக முயற்சி ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மே மாதம் 14, 15, 19 சுபதினங்களாகும்.

★

## மீன இராசி

(பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

இவ்வாரத்தில் இவர்களுக்கு நற்பலன் - தீப்பலன் கலந்து நிகழும். சஞ்சலம், நண்பர், குடிசன பகை, முயற்சித் தடைகள், பண நஷ்டம், தேக நலம் குன்றுதல், எதிரிகள், கஷ்ட பிரயாணம், அதே வேளையில் கடும் உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் ஆதியன காணப்படுகின்றன. சொத்துக்கள் பொதுவாக நற்பலன் தரும். கமத்தொழில் பலன் நன்மையாகும். உத்தியோகத் துறையில் புதிய பதவிகள், உயர்வுகள், பரீட்சை வெற்றிகள் காணப்படுகின்றன. மாணவருக்கும் கல்விச்சிறப்பு, வாக்கு சாதுரியம், பெரியோர்கள் பாராட்டு ஆதியனவுள. பெண்களுக்கு நற்பலன்கள் குறைவாக நடக்கும். சுபகரும முயற்சிகள் ஆரம்பமாகும். குடும்ப நிம்மதி சுமாராக இருக்கும். இவர்களுக்கு மே மாதம் 14, 19 சுபதினங்களாகும்.

பெல்ஜியன்

முள்ளுக் கம்பி

$12\frac{1}{2}$ & 14 அளவு

ஒவ்வொரு கன அங்குலத்துக்கும் 45 தொன் வீத அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமதுமுள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. ஸ்தாபன கடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும்.

s2/w3/2ACAC


## ஆற்றும் கடிதமிலை

— "வட்டூர் கானம்" —

மாலைப் பொழுதினிலே மங்கி மனம்வாடச்
சோலை நடுத்தென்றல் சோர்வகற்ற - வாலைப்பெண்
வந்தென்னைத் தீண்டிநின்றே வாடி அழுதவண்ணம்
சிந்தை குலைத்துரைத்தாள் சொல்.

சொந்தமங்கை வாடச் சொகுசையே தான்விரும்பிப்
பந்தமற்ற ஆங்கிலப்பெண் பாணிதொட்டுச்
— சிந்தைதான்
மாதவனை நோக்கிடவே மற்றவளும் விட்டகல
ஊதுலைபோல் உற்றூர் உளம்.

சட்டத்தின் விட்டத்தே சள்ளுச் சிறையினில்யான்
கட்டமுறச் சிங்களம்சொல் கன்னிகையே — மட்டற்ற
மாண்படைந்து என்றனையும் மாசு படுத்துகின்றாள்
ஏன்என்போர் என்பக்கல் இல்.

சித்தந் தெளிந்தவராய்ச் சீரில் சிறைமீட்டு
முத்தங்கள் தந்திடுவேன் முன்னாலே — மொத்தமதாய்
அவ்வளவும் நானறிவேன் ஆற்றும் கடிதமிலை
இவ்வளவோ ஈழத் திசை?

"புது மண வாழ்க்கையைத் தொடக்கும் இன்ப எண்ணத்தில் கொழும்பு செல்லும் அதே ரயிலில் – அவள் பெட்டிக்கருகாமையில்தானா கனகலிங்கமும் பிரயாணம் செய்யவேண்டும்?" —

# வெறி!

சிறுகதை

மாங்குளம் ரயில் நிலையமும் கடந்து விட்டது. வவனியா நெருங்கிக் கொண்டிருந்தது; கொழும்பு நோக்கிய யாழ்ப்பாண மெயில் வண்டி எதையும் பொருட்படுத்தாது, அந்த இரவின் குளிருக்கு ஏற்றாற் போல் தாளகதி தவறாமல் ஓடிக் கொண்டிருந்தது. கொழும்பில் பணியாற்றும் எண்ணற்ற குமாஸ்தாக்கள் நிரம்பி வழிந்த அந்த வண்டியின் —

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஒரேயோர் உருவம் மட்டும் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டிருந்தது.

கனகலிங்கம்—தன் தலைக்கு மேலே விசிறும் மின்சார விசிறியை நிறுத்திவிட்டுக் கண்ணாடி யன்னலைத் திறந்தான். பனிக்காற்று குப்பென்று உள்ளே பாய்ந்தது. அதையும் அலட்சியம் செய்யாது, தலையை வெளியே நீட்டினான்.

அந்தப் பெட்டிக்கு அடுத்த பெட்டியில் அந்தப் புதுமணத் தம்பதிகள் சல்லாபித்துக் கொண்டிருந்தது வெளிச்சத்தின் நிழலாக கீழே தரையில் படிந்தது. தெரிந்தது என்னவோ கொஞ்சம் தான். ஆனால் கனகலிங்கம் தன் உயிரே கொதிப்பது போன்ற உணர்வால் துடித்தான்.

'துரோகி — காதலிப்பதாகக் கூறிவிட்டுக் கைவிட்ட காதகி! — பிரேமா — என்னை விட, 'அவன்' உனக்கு உசத்தியாகிவிட்டானா?......'— அவன் மனம் பதைபதைத்தது.

அவனது குமுறலையும் எரிச்சலையும் பொருட்படுத்தாமல் அந்தத் தம்பதிகள் இன்பசாகரத்தில் ஆழ்ந்திருந்தனர்.

"பிரேமா! இப்படி நாம் தனியே பிரயாணம் செய்வது எவ்வளவு இன்பமாக இருக்கிறது தெரியுமா?" என்று கிளுகிளுப்புடன் பேசுகிறான் அவள் கணவன் குமாரசாமி.

"உம், அப்படியா சார்? எனக்குத் தெரியலையே! அப்படி என்ன இன்பமாம்?" என்று அவள் போதை மீறிப் பேசுகிறாள். அப்பப்பா! எத்தனை சாகசம்! எத்தனை பசப்பு!

"இன்பமா? எங்கே என்று சொல்லட்டுமா?"

"உம்..." — குரலில் நெளிவு.

சில நிமிடங்கள் மௌனமாகக் கழிகின்றன. அதைத் தொடர்ந்து அவளது கலகலவென்ற சிரிப்பொலி ரயிலின் இரைச்சலுடன் போட்டியிடுவது போல் கேட்டது. கனகலிங்கம் அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்தான்: 'அடி பிரேமா! இவனிடம் எத்தனை நாளைக்கடி உன் சாகசம்? என்னிடம் கொஞ்சி விளையாடியது போலத் தானே இன்று இவனிடமும் அளவளாவுகிறாய்?'

குமுறிய அவன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கதவோரம் போய் நின்றான். 'அவள்' போதை தெளியாத நிலையில் அவளது கணவனுடன் உல்லாசமாக இருப்பதைக் காணக் காண அவன் மூளை வெடித்து விடும் போலிருந்தது.

ஈப்போ என்ற மலாயா நாட்டின் நகரத்தில் ரயிலை முன்னால் இழுப்பவரும் யாழ்ப்பாணத்தவர் தான், பின்னால் தள்ளுபவரும் யாழ்ப்பணத்தவர் தான் என்று சொல்வார்கள். ஈப்போவில் மட்டுமல்லாது ஈழத்திலும் கூட ரயில்வே இலாகாவில் பெரும் பணியாற்றுபவர்கள் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் தாம்! இந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவன் தான் கனகலிங்கமும்.

காலம் கனகலிங்கத்தை யாழ்ப்பாணத்தை விட்டு வவனியாவில் நிரந்தரமாகக் குடியேற வைத்து விட்ட போதிலும், அவனது நெஞ்சினலைகள் யாழ்ப்பாணத்தில் பிரேமாவிடம் ஒன்றிப்போய் விட்டது.

உறவுப் பெண்ணான அவளும் அவனுடன் அன்போடு தான் பழகினாள்; ஆசையோடு தான் காதலிக்கவும் செய்தாள். ஆனால் —

வண்டு மலரை விட்டு வேறொன்றுக்குத் தாவுவதற்குப் பதிலாக, மலர் வண்டை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. ஆம்! என்ன காரணமோ, கனகலிங்கத்தை மணந்து கொள்ள முடியாது என்று பிரேமா மறுத்து விட்டாள்.

ஆசைக் கனவுகளின் எண்ணிக்கையில் அமிழ்ந்து போயிருந்த கனகலிங்கம் துன்பம் என்ற படகைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டான். நடைப் பிணமானான். அப்படி அவன் உலகப் பிடிப்பற்று வாழ்வது தனக்குப் பெருத்த அவமானமாகப் போய் விடும் என்று கருதிய அவன் தந்தை, அவனுக்கு வேறு இடத்தில், கலியாணம் செய்து வைக்க முயன்றார்.

நாட்கள் உருண்டன. பிரேமா தனக்கேற்ற குமாரசாமியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்.. புதுமண வாழ்க்கையைத் தொடக்கும் இன்ப எண்ணத்தில் கொழும்பு செல்லும் அதேரயிலில் - அவள் பெட்டிக் கருகாமையில் தானா கனகலிங்கமும் பிரயாணம் செய்யவேண்டும்? —

விதி விளையாடியது.

வாடைக் காற்றில் மரத்துப் போன உடலை எடுத்துக் கொண்டு, கூம்பிய உள்ளத்துடன் உள்ளே வந்து உட்கார்ந்தான் கனகலிங்கம்.

புகைந்தஉள்ளத்தில் தோன்றிய வெறியை அழுத்திக் கொண்டு, "பிரேமா! என்னை உனக்குப் பிடிக்காமல்போனது ஏன்? நான் செய்த தவறுதான் என்ன?" என்று மனத்துக்குள் புழுங்கினான்.

குமாரசாமியை நினைத்த மாத்திரத்தில் அவனது வெறி பெற்ற இதயம் விம்மித்தணிந்தது. 'என்னைவிட அவன் எந்த விதத்தில் உயர்ந்து விட்டான்? கொழும்பிலே குவிந்துகிடக்கும் ஓர் அரசாங்க அலுவலகத்தில் உள்ள சாதாரண 'கிளார்க்'. அவன் மீது இவளுக்கு எப்படித் திடீர்ப் பற்றுதல் ஏற்பட்டது?'

அவனது குமுறல்களைப் பொருட்படுத்தாமல் 'ரயில் விரைந்து கொண்டிருந்தது, வவனியாவை நோக்கி மிக நெருங்கி.

கனகலிங்கம் இறங்கத் தயாரானான்.

யாரை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளினாளோ, அந்தக் கனகலிங்கம் உடைந்த மனத்துடன் தான் பிரயாணம் செய்யும் வண்டியிலேயே வருகிறான் என்று அறியாத பிரேமா இன்னும் நூற்றைம்பது மைல்களுக்கு மேல் போக வேண்டுமே என்று தனக்குள் முனகிக் கொண்டிருந்தாள்.

வண்டி நின்றது வவனியாவில்.

கீழே குதித்த கனகலிங்கம் உறுமும் டீஸல் என்ஜினுடன் போட்டி போட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தான்.

'பிரேமா! என்னை ஏமாற்றி விட்டு நீ வாழப் போகிறாயா?'- அந்த எண்ணம் அவனைச் சித்திரவதை செய்தது. ஏமாற்றம் என்ற கொடிய அம்பு அவன் இதயத்தின் மூலைமுடுக்குகளில் ஊடுருவிச்சென்று தாங்கொணாத வலியை ஏற்படுத்தியது.

வெறி விளையாடியது இப்போது.

"ஐயா" - திரும்பினான் கனகலிங்கம்.

அவனது வயலில் டிராக்டர் ஓட்டும்தொழிலாளி கணேசன், பவ்வியமாக நின்று கொண்டிருந்தான்.

"என்ன கணேசா? ரயிலடிக்கே வந்துவிட்டாயா?"

"ஆமாம் ஐயா. நீங்கள் இந்த வண்டியிலே வருகிறீர்கள் என்று பெரிய ஐயா சொன்னார்கள். சரி ... பெட்டியைக் கொண்டு வாருங்கள்!..."

"பொறு கணேசா! ரயில் போய்க் கொள்ளட்டும்!"

"அது இப்போதைக்குப் போகாதாம். இன்றைக்கு ஒரு மணிநேரம் லேட்டாகும் என்று ஸ்டேஷன் மாஸ்டர் இப்போது தான் சொன்னார்."

"ஏன்? என்ன விஷயம்?"

"அனுராதபுரத்திலே ஏதோ பாதைக் கோளாறும். அங்கே நிலைமை சரியாகிறமட்டும் ரயில் இங்கேதான் நிற்கும் என்றார்!" என்றான் கணேசன்.

"நிச்சயமாகத் தெரியுமா?"

"ஆமாம்!"

கனகலிங்கத்தின் மூளையில் பளிச்சிட்டது மின்னல். "பிரேமா!... அடி பிரேமா!... விதிதான் உன்னை என்னிடம் காட்டிக் கொடுத்து விட்டிருக்கிறது. நீ வாழப் போகிறாயா? போ!... நானும் தான் பார்த்து விடுகிறேன் அதை!" – அவன் முகம் விகாரமாகியது. அவன் மனத்திலே என்றுமில்லாத வெறி - வெறி!

பரபரவென்று கணேசனை இழுத்துக் கொண்டு நிலையத்தின் மூலைக்குப் போனான் கனகலிங்கம்.

"கணேசா! நீ பணக்காரனாக வேண்டுமா?"

கணேசன் விழித்தான். "என்ன ஐயா சொல்கிறீர்கள்?"

"நீ செல்வத்தில் திளைக்க வேண்டுமா வேண்டாமா என்று மட்டும் சொல்! சரியா... அப்படியானால் இப்படி வா! நான் சொல்கிறபடி செய். உம்... தயங்காதே!..."

கணேசன் ஒரு விநாடி தயங்கினான். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டை விட்டுக் கோபித்துக் கொண்டு புறப்பட்ட பின்னர் தனக்கு வாழ்க்கையைச் சீராக்கிக் கொடுத்த கனகலிங்கத்தின் தந்தைக்காக அவர் குடும்பத்துக்கு அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் — கணேசன் கொண்டு வந்த 'டார்ச்' விளக்கொளியில் தண்டவாளத்துக்கருகாமையில் வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள் இருவரும்.

ஒரு மைலுக்கும் அதிகமாக நடந்து விட்டபின்னர் கனகலிங்கம் நின்றான். "கணேசா! இது தான் இடம். டிராக்டர் 'டூல்ஸ்' ஏதாவது இருக்கிறதா?"

பெரிய புஷ் கோட்டிற்குள் கையை விட்டுப் பார்த்தான் கணேசன். ஸ்பானர் கிடந்தது. "இருக்கிறது ஐயா!"

"அது போதும்! தண்டவாளத்தை இணைத்திருக்கும் இரும்புத் தகடுகளைக் கழற்று!"

கணேசனுக்கு அப்போது தான் திட்டம் முழுமையாகப் புரிந்தது. "என்ன ஐயா இது?"

"மேலே பேசாதே! இன்னும் கொஞ்ச நேரத்துக்குள் வவுனியாவை விட்டு வண்டி புறப்பட்டு விடும். அதற்குள் கழற்றியாக வேண்டும். உம்... ஆகட்டும்!"

கணேசன் மறுவார்த்தை பேசவில்லை. உழைத்துப் போன தனது கரங்களுக்கு வேலையைக் கொடுத்தான். நேரம் பறந்தது —

வவுனியாவில் ரயில் புறப்படும் ஒலி கேட்டது. இரும்புத் தகடுகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கழற்றப்பட்ட போதிலும் தண்டவாளம் அப்படியே ஆடாமல் அசையாமல் காட்சி யளித்தது.

வண்டி வந்து கொண்டிருந்தது.

நெருங்கி விட்டது.

மிகச் சமீபம்.

இமை மூடி விழிக்கும் நேரத்தில் — பெட்டிகள் கடாமுடா என்று சரிந்து விழும் ஓசையைத் தோற்கடிக்கும் வகையில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என்று தரம் பிரிக்க முடியாதவாறு 'ஆ... ஹா' என்ற பேரோலம் எழுந்தது — காதை அடைக்கும் கூக்குரல்கள்!...

"கணேசா!" — வெறியேஉருவாக நின்ற கனகலிங்கம் பரபரப்புடன் கூப்பிட்டான். "உனக்கு வேண்டிய பொருட்கள் — நகைகள் — எதுவும் சரி! கொள்ளையடித்துக் கொள்!... எனக்கு வேண்டியது எல்லாம் ஒருத்தி தான். அவள் முகத்தில் நான் காறி உமிழ வேண்டும்!" என்று பாய்ந்தான் என்ஜினுக்கு அடுத்த மூன்றாவது இரண்டாம் வகுப்புப் பெட்டிக்கு.

துகள் துகளாகப் போயிருந்த அந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியை, கும்மிருட்டிலும் கண்டுபிடித்து விட்டான் கனகலிங்கம். சடலமாய் விறைத்துக் கிடந்த குமாரசாமிக்கருகில் குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்தாள் பிரேமா.

முரட்டுத்தனமாக அவளைப் பிடித்து இழுத்த கனகலிங்கத்தின் கையைப் பிடித்தது —

கணேசன் தான்!

"வேண்டாம் ஐயா, இந்த அநியாயம்!"

"சீ போடா அப்பால்! இந்தப் பிரேமா எனக்குத் தேடித் தந்த அவமானத்துக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் —" பிரேமாவை ஓர் உலுக்கு உலுக்கினான்.

உணர்விழந்து, செயலிழந்து நின்ற கணேசன் இறக்கப் போகும் அந்தப் பெண்ணின் முகத்தில் டார்ச் விளக்கொளியை வீசினான்.

மறு விநாடி —

"ஆ! அடப்பாவி!... அவள்... அவள் என் தங்கையடா!... சின்ன வயதில் அவள் மீது சூடு போட்டதுக்காக வீட்டை விட்டு ஓடி வந்தவனடா. அவள் முகத்தில் இருக்கிறதே அந்தத் தழும்பு அது என் வினையடா!... இப்போது என் எதிரிலேயே அவளைக் கொலை செய்து விட்டாயே!..." என்று அலறிக் கொண்டே பாய்ந்து அடித்தான் கணேசன்.

கனகலிங்கம் துவண்டு விழும் வரை கணேசனின் முரட்டு அடிகள் ஓயவே இல்லை. இதையெல்லாம் கவனிக்காத விபத்துப் பிரயாணிகள் இன்னமும் ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

[யாவும் கற்பனை]

## ஜோவலன் வாஸ்

---

வாசகர்கள் கருத்து:

# பரதநாட்டியக்கலை குலப்பெண்களுக்கு ஏற்றதல்ல

— சதா. ஸ்ரீ —

'கலையும் கோவிலும்' என்ற தலைப்பில் சென்றவாரம் வெளியான கருத்தைப் படித்தேன். புங்குடுதீவு ஆலய நிர்வாகிகளின் செயல் முற்றும் சரியானதாகவே தோன்றுகிறது.

பரத நாட்டியக்கலை நமது கோவில்களில் பண்டைக்கால மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்துவந்ததும், அதனால் பரதநாட்டியம் ஆடும் பெண்களைத் 'தேவதாசி' அல்லது 'கடவுளின் அடியவள்' என்று வழங்கிவந்து பின் கடவுளின் அடியவள் அடியார்க்கு அடியளாகிக் கலைக்கே உலைவைக்கின்ற நிலையில் தான் கோவில்களினின்றும் அகற்றப்பட்டது. அதனால் முற்காலத்தில் பரத நாட்டியம் சில குடும்பங்களின் பரம்பரைக் கலையாக மட்டுமே இருந்தது. என்ன குறைகள் இருந்தபோதிலும் கலை சிறந்து வளர்ந்து வந்ததை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆனால் இன்றும் பிராமணக்குடும்பங்களில் அக்கலையை ஆதரிப்பதில்லை.

### தெய்வத்தன்மை

பரதநாட்டியக்கலையின் உன்னத நோக்கம் இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் நினைத்து இளம்பெண் நாட்டியம் ஆடுதல். இதை ஒரு கயாகம் என்றும் நாயக நாயகி பாவம் என்றும் கலை விற்பன்னர்கள் கூறுவார்கள். ஆனால் அது ஒரு லட்சிய நிலை. அந்த லட்சிய நிலையில் நின்று எந்தக் கலைஞர் பரத நாட்டியம் ஆடுகிறார், ஆட்டுவிக்கின்றார் என்பவை சிந்திக்க வேண்டியவையே. இரண்டாவது அந்த லட்சிய நிலையில் நின்று எந்த ரசிகர் அக்கலையை அனுபவிக்கின்றார் என்பதும் சிந்தனைக்குரியதே. கண்ணிலும், முகபாவத்திலும், உடையலங்காரத்திலும், சலங்கைகளின் ஓசையிலும், உடல் அசைப்பிலும் காதல் சொட்ட ஒரு இளம் பெண் மேடை மீது ஆடும்போது அது தெய்வீகக் காதலா அல்லது சாதாரணக் காதலா என்பதை ரசிகர்கள் மறந்துவிடுவது இயற்கையே. ஒருவர் இருவர் அந்த நுணுக்கமான வித்தியாசத்தை உணர்ந்து ஒரு வேளை அக்கலையை அனுபவிக்கலாம் ஆனால் அது சாதாரண ரசிகர்களிடையே பக்தி வெள்ளத்தைக் கரைபுரண்டோடச் செய்

(10-ம் பக்கம் பார்க்க)

# ஞானத் தந்தையாக விளங்கிய விபுலானந்தர்

## மாணவர்களுக்கு அடிகளார் உபதேசம்

— பண்டிதர் செ. பூபாலபிள்ளை —
(மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர்)

விபுலானந்த அடிகளார் தமிழ்ப்பண்டிதராகவும், விஞ்ஞான பண்டிதராகவும் இருந்ததோடு பயிற்றப்பட்ட ஒரு ஆங்கில ஆசிரியராகவும் இருந்தார். இதைவிட இவருக்குக் கல்விபயிற்றும் ஆற்றலும் அனுபவமும் நிரம்பவுண்டு. நல்லாசிரியராகிய இவர் மாணவருக்குக் குறிப்பெடுத்து எழுதி நூல்களைப் படிக்கவேண்டும் எனக் கூறுவார். இங்ஙனம் எழுதிப் படிப்பதனால் கிரகித்தலும், மீட்டலும், பதிதலும் மாணவருக்குப் பலபடிகளாக ஏற்படும். கற்போருக்குத்தெளிவேற்படும் என்றெல்லாங்கூறுவார்கள்.

"எழுதாது கற்பதால்
ஏற்றமுண்டாகா(து)
எழுதிக் கற்பதுவே
ஏற்றம் - எழுதுவதால்
மீட்டல் கிரகித்தல்
மென்மேற் பதிதலுடன்
கோட்டமறும்
நூற்குறிப்பால்."

இந்தக் காலத்து மாணவர் கல்வி கற்பதனால் ஏற்படுங் களைப்பை நீக்குவதற்குத் திரைப்பட மாளிகைக்குச் செல்லுகின்றனர். சென்று படங்களைப் பார்த்துப் பார்த்துச் சுவைத்து இன்புறுகின்றனர். இதனைக் கண்ணுறும் அடிகளார் படமாளிகைக்குச்சென்று படங்களைப் பார்த்துச் சுவைத்தின்புறுவதிலும் பார்க்கத் தமிழ்ப் பண்டிதர்களை அண்டி வணங்கி அவர்கள் காட்டும் காவியப்படங்களை மாணவர் கண்டு நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எண்வகைப் பொருட் சுவைகளையும் அவைகளை வெளிப்படுத்துஞ் சொற்சுவை சத்தச்சுவைகளையும் கண்டுங் கேட்டும் சுவைத்து இன்புறுதல் மேலாகும் என எடுத்துக் கூறுவார்கள்.

"நல்ல படமாளிகையை
நாடிச் சுவைப்பதிலும்
வல்லதமிழ்ப் பண்டிதனை
வாழ்த்தி நீ - அல்லலற
அற்புதமாய் நூற்படத்தை
ஆர்வமுறக் காட்டென்று
கற்பதனால்
இன்புறலாங் காண்ப."

மாணவர் நல்ல தரமான நூல்கள் பலவற்றைத் தெரிவு செய்து இடையறாது படிக்க வேண்டும் என்பது அடிகளார் கருத்தாகும். இங்ஙனம் படிப்பதால் பூவுலகத்தில் இருக்கும் போதே தேவருலக இன்பத்தை நாம் அனுபவிக்கலாம் என அடிகளார் எடுத்துக்கூறுவார்கள். அன்றியும் தாம் பல படித்த பட்டதாரிகளுடைய வீடுகளுக்குச் சென்றிருக்கிறார்களாம். அவர்கள் படுக்கையிலும், இருக்கையிலும், கைகளிலும் நூல்களே காணப்பட்டனவாம். இந்த உண்மையினை மாணவர் கற்றோர் இல்லந்தோறுஞ்சென்று கண்ணுற்று இடையறாது நல்ல பல நூல்களைப் படிக்கவேண்டும் என அடிகளார் மாணவருக்குக்கூறுவார்கள். இவற்றில் இருந்து மாணவர் பிற்காலத்துப் பண்பாடுள்ள பெருமக்களாக வாழ்வதற்காகவே கற்கிறார்கள் என்ற நல்ல கல்விக் கொள்கை அடிகளாரிடத்து அடிப்படையாக உண்டு என்ற உண்மை புலனாகிறதல்லவா?

"கற்றோரிடஞ்சென்று
கண்கவரும் நூலெலாஞ்
சுற்ற வரத்தோன்றுஞ்
சுந்தரத்தைப் - பற்றுடனே
கண்களிருக்கக் கண்டு நீ
கல்லா திருப்பதோ
பண்புறவே
நன்னூல் படி."

### கல்வியின் அவசியம்

கல்வியறிவில்லாதவரிடத்துப் பொருட்செல்வம் இருந்தாலும் அது நல்ல வழிகளிற் பயன்படாது. "கல்வியிலாதார் கந்தமிலாப் பூப்போன்றவர்." எப்பொழுது கவனமாகக் கற்றுச் சோதனைகளிற் தேறாத மாணவரிடத்துத் தமக்கு விருப்பம் இல்லை என்றெல்லாம் மாணவரிடம் எடுத்துக் கூறுவார்கள். இதனால் கற்பதிற் கவனம் செலுத்தாத மாணவர் பலர் அடிகளாருடைய அன்புக்குப் பாத்திரராக வேண்டும் என்று கரிசனையாகப் படித்தமையை நான் நேரில் அறிவேன். படியாத நாட்டுப் புறங்களில் இருந்து மூடநம்பிக்கையுடன் வந்த பல சோம்பேறிக் கிராமப் பிள்ளைகள் அடிகளார் புத்திமதியால் ஊக்கத்துடன் படித்ததால் மட்டக்களப்புத் திருக்கோணமலைக் கிராமங்கள் இன்று முன்னேற்றம் அடைந்துள்ளன.

"கல்வியிலா மாணவர்
கந்தமிலாப் பூப்போலச்
செல்வமிருந்தாலுஞ்
சிறப்புறார் - நல்ல
அளிக்குலம் பூங்காவை
அண்டித்தேன் உண்டு
களிப்பது போற்
கற்றுக் களி."

### பொதுநல சேவை

விபுலானந்த அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பெரும் பேராசிரியப் பணிபுரிந்தபோது சேரிகளுக்குச் சென்று அங்குறைந்த தீண்டாத் திருமேனியினருக்குச் சுகாதாரப்பணியும், இராப் பாடசாலைகளை அமைப்பித்துக் கல்விப்பணியும் புரிந்துள்ளார்கள். ஈழத்து மூடநம்பிக்கையுடன் வாழ்ந்த கிராமமக்களின் தாழ்ந்த நிலையினை உன்னி உன்னித் தமது வாழ்க்கையையே தியாகஞ்செய்து கிராமந்தோறும் பாடசாலைகளை நிறுவி அஞ்ஞான இருள் அகன்று மெஞ்ஞானஒளிதுலங்கத் திருப்பணி பல புரிந்தார்கள். இத்தகைய பரம்பரை ஒன்றினை வளர்த்துப் பிற்காலத்து நிலைநாட்டுவதற்குக் குருகுலங்களை அமைத்துத் தாமே அவற்றிற் குருவாக அமர்ந்து வாழ்ந்து காட்டினார்கள்.

"நாடா கொன்றோ
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர்
ஆடவர்
அவ்வழி வாழிய
நிலனே" என்பதும்,

"பெற்றதாயும்
பிறந்த நன்னாடும்
நற்றவ வானினும்
நனிசிறந்தனவே." என்பதும்

"என்கடன் பணி
செய்து கிடப்பதே"

என்பதும் அவர் திருவாக்கில் என்றும் ஒலிக்குந் திருமந்திரங்களாகும்.

இதனாற் போலும் பெற்றோர் ஒரு பிள்ளையைப் படிப்பிப்பது அவன் பெரிய பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகத்தமர்ந்து பெரும் பொருளீட்டி இன்புறுவதற்கல்ல. அவன் ஆகாயம் வரை உயர்ந்து சந்திரனைப் போலப்பிரகாசிப்பதிலும் பார்க்கத் தனது தேசத்தைப் பெற்றதாய் போல மதித்து அதிலுள்ள மக்களை அவர்கள் இருந்த படியில் இருந்து ஒருபடி உயரத்துக்காவது உயர்த்தித் தானும் அவர்களுடன் உயர்ந்துநின்று இன்புறுவதற்கேயாகும் என மாணாக்கருக்கு எடுத்தெடுத்துக் கூறி விசாலமான தேசபக்தியை அவர்களுக்கு உண்டாக்கி அவர்களைத் தங்கள் தேச நன்மைக்காக உழைக்கப் பயிற்றினார்கள். அதன் பயனை நாம் இன்று நுகருகின்றோம்.

"பெற்றார் மகிழப்
பிறந்தவூர் தான்மகிழக்
கற்றார் மகிழக்
களிப்புடனே - கற்பவனே
தாயெனவே எண்ணியுன்
தாய்நாடு முன்னேறச்
சேயெனவே
தொண்டினைச் செய்."

### நற்பண்பு வளர்த்தார்

அடிகளார் தம்மிடம் படிக்க வரும் உயர்தர மாணவர் தாம் முன்பு படித்த பாடசாலைகளைக் கல்வித்தரத்திற் குறைந்தவை என்று சுட்டிக்கூறும் இழிப்புரையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது போலவே குருவாகிய தமது அறிவுஒழுக்கங்களின் உயர்வினைக் கண்டு தமது குரு, தந்தை, தாயரை இழிவாக மதித்துப் பேசி நடக்கும் மாணவர் பேச்சையும், செயலையும் ஒரு சிறிதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அந்தப் பாடசாலையும் அப்படிப்பட்ட குரு, தாய், தந்தையரும் இருந்த காரணங்களினாலன்றோ இந்தப் பாடசாலையும், எமது சந்நிதானமும் எல்லாம் உங்களுக்குக் கிடைத்தன எனக் கூறி நன்றிமறவாத பண்பினை மாணவரிடையே வளர்த்து வந்தார்கள்.

### சுவாமிகளுடன் எனது அனுபவம்

1927 - ல் கோணேஸ்வர வித்தியாலயத்துக்கு நான் ஒரு உதவி உபாத்தியாயனாகப் படிப்பிக்கவும், அடிகளாரிடம் பண்டித பரீட்சைக்குப் படிக்கவும் எனது வாலிபப் பருவத்து ஒரு பிரமச்சாரியாகச் சென்றேன். செல்லும் போது கல்வித் தாகமுள்ள நான் திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆங்கிலங் கற்பதற்குச் சுமார் பத்து வயதுள்ள எனது இளைய தம்பியையும் உடன் அழைத்துச் சென்றேன்.

எங்கள் பிரிவினால் மட்டக்களப்பு ஆரப்பற்றையில் உள்ள எங்கள் அருமையான அன்புத் தந்தையார் மனங்கலங்கி எங்களை அறியாமலே அடிகளாருக்குப் பணிவான பக்தியுள்ள கடிதம் ஒன்று எழுதி அனுப்பியுள்ளார்கள். மடத்தில் அடிகளாருக்குத் தனிமையான ஒரு அறை அமைந்துள்ளது. ஒரு தினம் பாடசாலை விட்டு வந்த என்னைத் 'தம்பி பூபாலபிள்ளை' என்று கன்னமிர்தமான இனிய எடுத்தல் ஓசைக் குரலில் அந்த அறையுள் இருந்தபடி அடிகளார் அழைத்தார்கள். பணிவுடன் திருமுன்னிலைக்குச் சென்று கரங்கூப்பி வணங்கியபடி நின்றேன். அத்தருணம் அடிகளார் ஒரு கடிதத்தை என்னிடம் வாசிக்கக் கொடுத்தார்கள். அது எங்கள் தந்தையார் அடிகளாருக்கு எழுதிய கடிதம். அதில் 'சுவாமிகாள்' என்னிரு கண்மணிகள் போன்ற இரு குழந்தைகளையும் இனிமேல் தங்கள் குழந்தைகளாகத் தத்தம் பண்ணித்தந்து விட்டேன். இனி அவர்களுடைய தேகவளர்ச்சி மனோவளர்ச்சிகளைக் கவனிக்கும் தந்தை நீங்களே எனத் திருமுன்னிலைக்கு விண்ணப்பித்துத் திருவடிகளுக்குத் தலைசார்த்தி வணக்கம் தெரிவிக்கின்றேன்'. என்று எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீஇராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரரைத், திருகோணமலை இந்துக்கல்லூரி அதிபரை, கல்வி அறிவு ஒழுக்கம் தவங்களின் மேற்பட்ட விபுலானந்த அடிகளாரை எங்கள் தந்தையாக நியமித்து எழுதியமை எனக்கு ஒரு சிறிதும் பொருந்தாமையால் அடியேன் அதனை வாசித்துத் திருமுன்னிலையில் நாணித் தலை குனிந்தேன். குனிந்தபடி அடிகளாரைக் கோணற்பார்வையாகப் பார்த்தேன். என் கருத்தைக் குறிப்பினால் அறிந்த அடிகளார் சிறியேன் மீது அருட்கண்ணோக்கஞ் செய்தருளி 'இந்தப் பண்பான தந்தை இல்லாவிட்டால் இப்படி ஒரு பிள்ளை எப்படிப் பிறப்பது?' என்று மேன்மேலும் நாணமும், உளக்குதூகலமும் எனக்கு மாறி மாறி உண்டாக திருவாய் மலர்ந்தருளினார்கள். இந்த அருளினாலே அன்று முதல் இன்று வரையும் ஏழை அடியேன் சிங்கத்தின் பால் குடித்த நரிக்குட்டியாக, விபுலானந்த தாசனாகக் குதூகலமாகக் குருபதம் நினைந்து வாழ்கின்றேன். அடிகளாரது திருவாக்குச் சிலையில் எழுத்தாக இன்றும் எனது புண்மனத்துப் பதிந்துள்ளது. அன்றுவரை எனது தந்தை தாயாரைத் தெய்வமாகப்பரவி இறுதிக்காலத்தும் அவர் வாழ்த்துரையைப் பெற்றுள்ளேன். இக் கூறியவற்றால் மாணவர் பெற்றோரையும், குரவரையும், தாம் முன்பு கற்ற பாடசாலைகளையும் நன்கு மதித்து நன்றி மறவாதொழுகுதல் வேண்டும் என்பது நமது அடிகளார் கருத்தென்பது பெறப்படுகிறதல்லவா?

### குருவும் சிஷ்யனும்

பெற்றோர் புரிந்த பெருநன்றி
தானினைந்து
நற்றவத்தோன் ஆனாலும்
நன்றி—மறவாது
பொற்பாதம் போற்றிப்
புனிதவடித் தொண்டுசெய்து
கற்பவனே நன்மாணவன்

கயிலாய யாத்திரை செய்கிற போதும் வழியிற் கண்ட ஒரு கலாசாலை மாணவர் கண்ணோய் கண்டு இரங்கிக்கருணை பூண்டு அவர் ஆசிரியருக்குக் கண்ணோய் நீக்கும் உபாயம் கூறி உடன் தானுந்திருப்பணி புரிந்த, மாணவர்மயமான அடிகளார் மாணவர் வேலையில் ஊக்கங்காட்ட வேண்டும். விடாமுயற்சியுடையவராக உழைத்துத் தமக்குக் குறிப்பிட்ட வேலையைத் தொகுத்த இடத்தில், கணித்த நேரத்திற் செய்து முடிக்க வேண்டும். ஏழைகளிடத்து இரக்கங் காட்ட வேண்டும். தருமசிந்தை உடையவர்களாக வாழவேண்டும். உண்மை பேச வேண்டும். புத்திக்கூர்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அகப்புறத்தூய்மை உள்ளவராதல் வேண்டும். கீழ்ப்படிவுள்ளவராதல் வேண்டும். என்றெல்லாம் அருளுடன் எடுத்துச் சொரிந்த அறிவுரைகள் அளப்பில. எனினும் இறுதியாக ஒரு தருணத்து அடிகளார் கூறிய பொன்போன்ற அறிவுரை ஒன்றினை உதாரணமுகத்தால் விளக்கிக் கூறுவதோடு "மாணவர்க்கு" என்ற இத்தப்பகுதியை நிறைக்கின்றோம். மட்டக்களப்புக் கல்லடி உப்போடைச் சிவபுரியில் வாழ்ந்த சிவனடியாருள் பாக்கிய இரத்தினம் என்ற ஒரு மாணவர் படித்து வந்தார். இவர் நல்ல விவேகம் உள்ளவர். உசாருள்ளவர். வசீகரத் தோற்றம் உள்ளவர். இவரிடம் அடிகளாருக்குக் கரிசனையும், நிரம்பிய அருளும் உண்டு. இந்தச் சின்னஞ்சிறிய சிவனடியார் தூயஉள்ளத்துடன் அடிகளார் கூறுவனவற்றை நேரே கண்டிப்பார். நாமெல்லாம் இவ்விவ்வாறு ஒழுகவேண்டும். இதனை 'டக்'கென்று இப்பொழுதே செய்ய வேண்டும், என்றெல்லாம் அடிகளாருக்கே விதி வகுத்துக் கூறுவார். இவர் கூறுவனவற்றுள் ஒரு சிலவற்றை அடிகளார் மறுக்காது ஏற்றுக் கொள்வதும் உண்டு

ஒரு தினம் இவருக்கும் அடிகளாருக்கும் ஒரு உருசிகரமான கலந்துரையாடல் நிகழ்ந்தது. அதனை ஈண்டுத் தருகின்றோம்.

"தம்பி பாக்கியஇரத்தினம், நீங்கள் கூறுகின்ற விதிகளுள் ஒருசிலவற்றை நாங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோம். நாங்கள் கூறும் விதிகளை நீங்கள் அதுபோல ஏற்றுக் கொள்ளுகிறீர்களில்லை" "சுவாமி எங்களுக்கு யோசிக்கும் சுபாவம் இருக்கின்றது தானே, நாங்கள் ஏன் உங்களுக்கு விதிவகுக்கக்கூடாது? எதிர்நியாயம் பேசப்படாது" "கண்டிப்பாக யோசிக்கவேண்டும், கூறவேண்டும், ஆனால் நீங்கள் சில தருணங்களில் நலல முகத்தை ஓட்டைக் கண்ணாடியுட் பார்த்துத் துன்புறுபவர் போல உங்களுடைய நல்ல யோசனைகளைத் தடதடப்பினால் வன்சொல்லில் கேட்போர் வெறுக்கத்தக்க முறையில் வெளியிடுகிறீர்கள். அதனால் நாம் மனமடிவுறுகிறோம். நீங்கள் கூறுவனவற்றுட் பொருத்தமானவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது எமது கடமை" "சரி அப்படியானால் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் சுவாமி" அப்படி உற்சாகமாகக்கேள் மிகவும் நல்லபிள்ளை" என்று கூறி அவருடைய தோளில் தட்டியபடி

"உன்னிடத்து நானிவ்வா
றேயொழுகல்வேண்டுமென்பாய்
என்னிடத்து நீயவ்வா றேனொழு
காய்—உன்னிடத்து
நானொழுகல் போல நனிவிரும்ப
நீயொழுகல்
தேனொத்த சீல முறை" என்று அவருக்கும் வாசகராகிய நமக்கும் நல்ல புத்தி எடுத்துக் கூறிய ஞானத்தந்தையை நாம் எப்படி மறப்பது?

---

## அழகு செய்

இலையோ, பூவோ, பழமோ எதுவாக இருந்தாலும் அதனுடன் பக்தி இருக்குமானால் போதும். எவ்வளவு கொடுத்தாய் என்பது முக்கியமன்று; எந்தப்பாவனையுடன் கொடுத்தாய் என்பது முக்கியம்.

வாழ்க்கையின் சாதாரண கர்மங்களையும் கிரியைகளையும் ஆண்டவனுக்கு உரிமையாக்கி விடுவோமானால் அதிலிருந்து வாழ்க்கையில் ஒரு தனித்திறமை தோன்றும். மோட்சம் கைக்கு வந்துவிடும்.

ஒருபுறம் தொழிலும் மறுபுறம் பக்தியுமாய் ஒன்று சேர்ந்து வாழ்க்கையை அழகு செய்து கொண்டே போ.

—வினோபா பாவே

"கத்தி முனையிலும் புத்தி முனை எத்தனையோ மடங்கு பலமும் சிறப்பும் மிக்கது. கலக்கமும் திகிலுமான சூழ்நிலையில் இலக்கு வைத்துக் கருமம் ஆற்றினால் செயற்கரிய கருமங்களையும் சிறு பிரயத்தனத்துடன் செய்து முடித்துவிடலாம்."

# சுதந்திர இலங்கையின் மகா தேசாதிபதி

## முதல் இலங்கையரான சேர் ஒலிவர்

**பதவிப் பித்தலாட்டம்: ஒலிவர் மீது வசைபுராணம்: சூழ்ச்சிவலையிற் சிக்கிய 'பண்டா': 'குசுகுசு' கூட்டங்கள்: எதிர்க்கட்சியினர் ஆலோசனை: ஜே. ஆர். மனக்குழப்பம்: கொத்தலாவல மிரட்டல்: வெற்றிக்கு வழி: 'நைசான' பேச்சு: பிசுபிசுத்த திட்டம்: பொதுவாழ்வில் உயர் நோக்கு**

— பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் —

## ஈழப்பாட்டனின் கடிதங்கள்: 13

"மஹாரலிங்கவாசம்"
கீரிமலை, 29-4-62

எனது அருமையான
ஹறீன்,

டி. எஸ். சேனநாயக்கா மரணமானார். ஒலிவர் குணத்திலக்கா, உணவு, விவசாய மந்திரியாக டட்லியிடமிருந்து பொறுப்பேற்றார். ஏறக்குறைய 15 வருடகாலம் விவசாய மந்திரியாக இருந்தார் டி. எஸ். இந்த நாட்களில் இத்துறையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாதிரி அவர் திறம்படச் சிந்தித்து நாட்டு நலங்கருதி நற்சேவை செய்தார். இதனால் டி. எஸ். கீர்த்தியும், பிரபல்யமும் அடைந்தார். இலங்கை, விவசாயத் துறையிலும், உணவுஉற்பத்தி முறையிலும் அதிகம் முன்னேற மூலகாரணராக விளங்கியவர் டி. எஸ். சேனநாயக்கா என்றால் மிகையாகாது. ஆனால், இவை சம்பந்தமான எவ்வித திட்டங்களையோ, கொள்கைகளையோ என்னுடன் கலந்து ஆலோசியாமல் அல்லது என்னால் ஊக்குவிக்கப்படாமல், அல்லது ஆக்குவிக்கப்படாமல் அந்நாட்களில் அவர் செய்ததில்லை.

பின்னர், லயனல் கொத்தலாவல பிரதம மந்திரிப் பதவியை, டட்லிசேனநாயக்காவிடமிருந்து ஏற்றுக் கொண்டார். செனேட்டராக இருந்துவந்த ஒலிவர் குணத்திலக்கா ஆரம்பத்தில் லயனல் கொத்தலாவலையின் மந்திரிசபையில் நிதி மந்திரியாக்கப்பட்டார். இப்பதவியை ஒரு குறுகிய காலத்துக்கே ஒலிவர் வகித்துவந்த போதிலும் அச்செய்கை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சம்பிரதாயங்களின் அடிப்படையிலமைந்த பார்லிமெண்ட் ஜனநாயக நடைமுறைகளுக்கும், ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல வழக்கங்களுக்கும் முற்றிலும் முரணானதாகவே அமைந்தது. சற்று நாட்களால் எம். டி. எச். ஜயவர்தன நிதிமந்திரிப் பொறுப்பை ஒலிவரிடமிருந்து ஏற்றுக் கொண்டார். இவர் இலங்கைச் சர்வகலாசாலையில் எனது மாணவராக இருந்தவர்.

அந்நாட்களில் சோல்பரிப் பிரபு இலங்கையின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். டி. எஸ். இறந்தபோது மந்திரி சபையைப் பொறுப்பேற்று பிரதம மந்திரிப்பதவியில் அமர்ந்து நாட்டின் நற்பரிபாலனத்தை நிர்வகிக்கும்படி கவர்னர் ஜெனரல் டட்லியை அதிகாரபூர்வமாக அழைத்திருந்தார். ஆனால் தன்னையே அப்பதவிக்குத் தகுதியுடையவராகக்கருதி, கவர்னர் ஜெனரல் அழைப்பாரெனக் காத்திருந்தார் லயனல் கொத்தலாவல. கவர்னர்ஜெனரலின் மாறான இந்த நடவடிக்கையைக் கண்டு மிகுந்த ஏமாற்றமும், ஆத்திரமுமடைந்த கொத்தலாவல, கவர்னர் ஜெனரலை "ஒரு கை" பார்ப்பதற்கே மனவுறுதி கொண்டுவிட்டார். டி. எஸ். சேனநாயக்கா தனக்குப் பின் தன் மகனை பிரதமராக்க வேண்டுமென்று என்னமாதிரி மூலமந்திரம் ஓதியிருந்தாலும், அவருடைய சொல்லைக்கேட்டு, சோல்பரிப்பிரபு, டட்லிசேனநாயக்காவை பிரதமராக அழைத்திருக்கக்கூடாது. இந்தப் பதவிப் பித்தலாட்டத்தையிட்டு இவர்களுக்கிடையே நடந்த போட்டிகள், பூசல்கள், சூழ்ச்சிகள் பற்றி விபரமாக இன்னுமொரு கடிதத்தில் எடுத்துரைப்பேன். என்னுடைய அபிப்பிராயப்படி அக்தப் பிணக்குகள் யாவும் அவமானமும், அபகீர்த்தியும் மிக்க செயல்களாகும்.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் கவனர் ஜெனரல் பிரதம மந்திரியின் ஆலோசனையின்றித் தனது முழுச்சுவாதீனத்தோடு நடந்துகொள்ளமுடியும். அது என்னவெனில், ஒரு பிரதமர் இறந்துபோனால் அல்லது தனது கடமைகளை ஆற்றும் வல்லமை இல்லாதவராகப் போய்விட்டால், இன்னோர் பிரதமரைத் தனது எண்ணப்படி நியமிக்கலாம். அவர் பார்லிமெண்ட் சபையைக் கொண்டு நடத்தி நாட்டைப்பரிபாலனம் செய்யத்தக்க பலமுள்ளவராய் இருத்தல் அவசியம். இது பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஜனநாயக முறையாகும்.

லயனல் கொத்தலாவல பிரதம மந்திரியாயிருந்த காலத்தில் மாட்சிமை தங்கிய மகாராணியார் (எலிசபெத் II) இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்கள். அந்த வேளை, பிரதம மந்திரி என்னும் அதிகாரபூர்வமான அந்தஸ்தினால், "சோல்பரிப்பிரபுவை கவர்னர் ஜெனரல் பதவியினின்றும் நிற்பாட்டி, அவருக்குப்பதிலாக, சேர் ஒலிவர் குணத்திலக்காவை அமர்த்த வேண்டும்" என்று பிரதமர்கொத்தலாவல மகாராணிக்குப் புத்திமதி கூறினார். அப்போது பெரியபிரித்தானியாவுக்கு இலங்கை அரசாங்கத்தின் இராஜ தந்திர தூதுவராக (ஹைகமிஷனராக) இங்கிலாந்தில் செயலாற்றி வந்தார் சேர் ஒலிவர் குணத்திலக்கா. இராணியின் இலங்கை வருகையில் கலந்து கடமைகளைக் கண்காணித்து உதவ இங்கு வந்திருந்தார்.

### சிக்கலான சம்பவம்

முன்னேற்பாடுகள் யாவும் நடந்தன. ஒலிவரை கவர்னர் ஜெனரலாக இராணிமாளிகையில் அமர்த்திப் பட்டமளிப்பு வைபவங்களை நடத்துவதற்கு சிலநாட்களுக்குமுன், ஒரு சிக்கலான சம்பவம் நடைபெற்றது. "ட்ரைன்" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை அவதூறான குற்றச்சாட்டுச் சுடுசொற்கள் நிறைந்த கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. அக்கட்டுரையில் பழிசுமத்தப்பட்டு வசைபுராணத்திற்கு இலக்காகிய பலருள் ஒலிவர் குணத்திலக்காவும் ஒருவர். இது சம்பந்தமாக முக்கிய எதிர்க்கட்சி அங்கத்தவர்களுள் சில பிரமுகர்களாய் விளங்கிய என். எம். பெரேரா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பீட்டர்கெனமன், பி. எச். உவில்லியம் சில்வா ஆகியோரும் நானும் சேர்ந்து ஒரு பிரேரணை கொண்டுவரவிருப்பதாக முன்னறிவித்தல் கொடுத்திருந்தோம். அந்தப் பிரேரணை முன்னறிவித்தலில் குறிப்பிட்டிருந்ததாவது: "சில நாட்களுக்குமுன் கடமையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் கவர்னருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை ஆராய்ந்து விளங்கித் தீர்ப்புத் தெரிவிக்கும் வரையும், ஒலிவர் குணத்திலக்காவை கவர்னர் ஜெனரல் பதவியில் வைப்பதை ஒத்திப்போடவேண்டும். அதாவது, ஒலிவரின் நியமனத்தை காலதாமதம் செய்யும் வண்ணம் உடனடியாக மகாராணிக்குப் புத்திமதி கூறவேண்டும்." இந்தப் பிரேரணை எங்கும் எவர் மனத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. நாட்டுமக்கள் இப் பிரேரணையின் பெறுபேறுகளை அறிய நிறைந்த ஆவலோடு இருந்தார்கள். இந்தப் பிரேரணையின் நகல் பிரதி பிரேரிக்கப்படும் ஐவராலும் கூடி ஆராயப்பட்டபோது, அக்கூட்டத்தில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மனப்படத்தை நான் அறிந்துகொள்ளமுடிந்தது. இந்த விஷயத்தில் அவர் பங்கெடுத்துக் கொண்டதின் நோக்கம் நூற்றுக்கு நூறுவீதமும் பொதுநல விருப்பால் அல்ல என்பதுதான், அவருடைய உண்மையான மனோபாவமாகும். டி. எஸ். ஸினுடைய சூழ்ச்சிவலையில் சிக்கித் தவித்த பண்டாரநாயக்காவை அவருடைய மந்திரிசபையிலிருந்து இராஜினாமாச் செய்யும்படியான சூழ்நிலை தந்திரமாக நிறைவேற்றப்பட்டது. தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையும் கிள்ளுவதில் டி. எஸ். அவ்வளவு சாமர்த்தியசாலி என்பதை எண்ணுந்தோறும் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு கேந்தியும், தோல்வியும், வெகுளியும் சேர்ந்தவொருமனவுணர்ச்சியே ஏற்படுவதாய் இருந்தது. இதை அவரால் ஒருபோதும் மறந்துவிடமுடியவில்லை. அவரைக் கபினெட்டிலிருந்து அப்புறப்படுத்திய தந்திரோபாயங்கள் பற்றி சேனநாயக்காவும் ஒலிவரும் கலந்து சம்பாஷித்திருக்காமல் ஒருபோதும் நடந்திருக்கமுடியாது. பண்டாரநாயக்கா அதன் நிமித்தம் ஒலிவர் மீது "கறள்" வைத்திருந்தார். ஒலிவர் அந்தச் சூழ்ச்சியில் எடுத்த பங்குக்குப் பழி வாங்க வேண்டும் என்பது அவரின் எண்ணமாகும்.

அந்தப் பிரேரணை பார்லிமெண்டில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. அன்றைய தினம் பார்லிமெண்ட் அங்கத்தினர் நடமாடும் லொபி மண்டபம் நிறைந்திருந்தது. சிந்தனையைத்தூண்டும் மனக்கிளர்ச்சியான பல பேச்சுவார்த்தைகள் நிறைந்திருந்தன. மூலைக்குமூலை "குசுகுசு"க் கூட்டங்கள், ஆங்காங்கே அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி அங்கலாய்ப்பு, ஆட்டோட்டமும், ஆரவாரமும், அமளிதுமளியும், அக்கறையும், எக்காளமுமாக ஏகமும் காட்சியளித்தது!

### உருக்கமான வினா

முன்னைநாள் பிரதமர் டட்லி சேனநாயக்கா பார்லிமெண்டில் அரசாங்கத்தின் பின்னணிப் பிரமுகராக அப்போதிருந்தார். அன்று அந்த வேளையில் லொபி மண்டபத்தில் அங்குமிங்குமாகச் சென்றுகொண்டிருந்தார். அவர் நின்றுகொண்டிருந்த இடத்தைத் தாண்டி நான் அப்பால் சென்றேன். அவர் என்னைச் சைகைகாட்டி அழைத்தார். இருவருமாக அருகோரம் சென்றோம். எனது ஞாபகத்திற் கியன்றவரையில் அவர் பின்வருமாறு என்னிடம் கூறினார்: "சுந்த், இந்தப் பிரேரணையை விவாதிப்பது நல்லதென்று நீங்கள் எண்ணுகிறீர்களா? ஒலிவர் கவர்னர்ஜெனரலாக நியமிக்கப்பட்டுவிட்டார்.

அந்த உயர்ந்த பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இலங்கையர் அவரேதான். அவரை அந்தப் பதவியில் அமர்த்திப் பட்டம் சூட்டும் வேளையிலா இப்படியாக அவலட்சணமான விடயங்களை அம்பலப்படுத்துவது? எங்கள் பட்டு வஸ்திரத்தின் அழுக்கை எல்லோரும் கண்டு எள்ளி நகையாடும் வண்ணம் கழுவிக்காட்டுவது எமக்கழகா? அப்படிச் செய்தால் நாளைக்கு உலகம் எங்களைப் பற்றி என்ன மாதிரி நினைக்கும்? அதுவும், உங்களைப் போன்ற ஒருவர், உங்கள் கூட்டத்துக்குள் ஒருவராக இருந்து வந்த எம்மவரை மானபங்கஞ் செய்ய ஒத்துக் கொடுக்கலாமா? நீங்களுமா முன்வந்தீர்கள்! நீங்களே எண்ணிப் பாருங்கள்! எல்லாவற்றிலும் முக்கியம் என்னவெனில் நம் தாய் நாட்டின் நற்பெயருக்கு நாம், ஒரு பழுவை — நீங்காத இழுக்கை ஏற்படுத்துவது அறிவுடைமையா?" டட்லியின் இந்த உருக்கமான வினாவுக்கு உகந்தவோர் பதில் கொடுக்க என்னால் முடியவில்லை. "டட்லி, உங்கள் பேச்சில் அதிகம் உண்மையுண்டு. என்னால் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்வேன்".

நான் சாவதானமாகப் பலவித யோசனைகளுடன் அவ்விடம் விட்டகன்றேன். பிரேரணைக்கு ஒப்பமிட்ட மற்றும் நாலு அங்கத்தவர்களையும் தனித்தனி சந்தித்துப் பேசினேன். அவர்களின் மனநிலை எப்படியெனத் தட்டிப் பார்த்தேன். ஒருவராவது பிரேரணையைக் கைவிடுவதற்கு ஒத்துக் கொடுக்க இணங்காது, திட்டவட்டமாக மறுத்து விட்டார்கள். ஆகவே இனி எமக்குள்ளது ஒரேஒரு வழிதான். அதாவது, பிரேரணை விவாதிக்கப்படவிருக்கும் நேரத்தில் விவேகத்தை உபயோகித்து அது நிறைவேறு வண்ணம் செய்தல் ஆகும் என்னும் முடிவுக்கு வந்தேன்.

### ஒன்றுகூடி ஆலோசனை

அன்று காலை; பிரேரணை பார்லிமெண்ட் உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. விவாதம் ஆரம்பிக்கப் போகிறது. எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ஒன்று கூடி ஆலோசனை நடாத்தினர். எவரெவர், என்ன ஒழுங்கில் அந்தப் பிரேரணையின் மீது பேசவேண்டும் என்பது தான் அந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது. என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், பிரேரணையைக் கொண்டுவந்து, விவாதத்தை ஆரம்பித்து வைப்பதென்றும், நான் அதை ஆமோதிக்கவேணுமென்றும், ஒழுங்கானது. பேர் போன எனது மனப்போக்குக்கு மாறாக, ஒரு வார்த்தையும் பேசாமல், எனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று, கௌரவ சபாநாயகருக்கு தலை வணங்கி, திரும்பவும் எனது

(8-ம் பக்கம் பார்க்க)

# உலகமேடை

டி.எம்.எம்.

## "அஸாத் காஷ்மீர்"

எதிர்பார்த்தபடியே பாதுகாப்பு சபையில் காஷ்மீர் விவாதம் பிசுபிசுத்துவிட்டது. பாகிஸ்தானின்நோக்கம் ஈடேறவில்லை. பாகிஸ்தானின் சார்பாக அமெரிக்காவோ, பிரிட்டனே அல்லது அதன் இதர தோழர்களோ எவ்விதத் தீர்மானமும் கொண்டுவரவில்லை. தேதி குறிப்பிடாமலே மறு விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆனல் சபை விவாதம் நாம் முன்பு குறிப்பிட்டபடியே பிரபாதமாய் இருந்தது. 6 மணி நேரம் பாகிஸ்தானின் கட்சியை, முன்னுள் உலககோர்ட் நீதிபதியாய் இருந்த சர். முகம்மது ஸபருல்லாகான் விளக்கினர். ஆனல் இந்தியப் பிரதிநிதி திரு. கிருஷ்ண மேனன் அவருடைய வாதங்களை அக்கு அக்காகப்பிய்த் தெறிந்துவிட்டார். ஸபருல்லாகானின் வாதத்தில் பல அம்சங்களுக்கு, முன்பே இந்தியா பதிலளித்துவிட் து என திரு. மேனன் கூறி, பாகிஸ்தானின் புதிய யோசனைகளை அடியோடு ஏற்கமுடியாதென வாதித்தார். காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், இதற்குக் காலங்கடந்து விட்டதென்றும் கூறி, காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்றும், அஸாத் காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் வெளியேறுவதே பிரச்சினை தீருவதற்கு ஒரேவழிஎன்றும் திரு. மேனன் மிகத் திறமையுடன் விவாதித்தார். பாதுகாப்பு சபையில் இதுவரை இவ்வளவு திறமையாக எந்தப் பிரச்சினையையும் விவாதித்தது கிடையாது எனக் கூறி, அமெரிக்கப் பிரதிநிதி, திரு. மேனனைக் கைகுலுக்கிப்பாராட்டினர். திரு மேனன் பாதுகாப்புசபையின் ஒரே பிற்பகல் கூட்டத்தில் ஸபருல்லாகானுக்கு பதிலளித்துவிட்டார்.

அஸாத் காஷ்மீர் சம்பந்தமாக சீனவுடன் பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்து கொள்வது பற்றியும் அவர் பிரஸ்தாபித்தார். காலவரையறையின்றித் தாம் நியூயோர்க்கில் தங்கமுடியாதென்றும் அவர் கூறினர். பாதுகாப்புசபையின் அடுத்த கூட்டத்தை விரைவில் நடத்த மீண்டும் பாகிஸ்தான் முயற்சி செய்து கொண்டிருப்பதாய்க் கூறப்படுகிறது.

பாதுகாப்பு சபை விவாதத்தை இந்தியா லட்சியம் செய்யவில்லை என்பதும், காஷ்மீர் பிரச்சினை தீர்ந்துபோன விஷயம் என்று அது கருதுவதும் மேனனின் நடவடிக்கையிலிருந்து ஊர்ஜிதமாயிற்று. காலவரையறையின்றி தமது பிரதிநிதியை அங்கு வைத்திருக்க முடியாது என அறிவிக்கப்பட்டது இந்த உண்மையை நிருபிக்கப் போதுமானது.

அஸாத் காஷ்மீரில் ஏற்கனவே பாகிஸ்தான் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மங்களா அணைக்கட்டுக்கான வேலைகள் அங்கு நடைபெற்றுவருவதும், இப்போது சீனவுடன் எல்லைப் பிரச்சினை பற்றி அது பேசுவதும் ஒரு விஷயத்தைப் புலப்படுத்துகிறது. அஸாத் காஷ்மீரைப பொறுத்தவரை, அது தனக்குச் சொந்தம் எனத் தீர்ந்து போய்விட்டதாய் பாகிஸ்தான் கருதுகிறது என்பதே இந்த விஷயம்.

காஷ்மீரை விட்டால் சீனவுடன் பாகிஸ்தானுக்கு பூகோள எல்லையே கிடையாது. அஸாத் காஷ்மீரை தனது பிரதேசமாகக் கொண்டே இப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. சீனவுடன் பாகிஸதான் இவ்விதத்தில் தொடர்புகொள்வது இந்தியாவுக்கு மட்டுமின்றி அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் கூட சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவின் ஸ்திரமான ஜனநாயக அரசாங்கத்துக்குத் தொந்தரவு கொடுத்து, அதன் பொருளாதார அபிவிருத்தியின் வேகம் குறைக்கப்படுவதைஅமெரிக்கா விரும்பவில்லை. அரசியல் ரீதியில் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றமும், ஜனநாயக வளர்ச்சியும் அமெரிக்காவுக்கு முக்கியமானது.

எனவே சீனவுடன் இவ்விஷயமாகப் பேரம் பேசுவதை அமெரிக்கா விரும்பாது எனலாம். மேலும், சீன அமெரிக்காவின் தீண்டத்தகாத எதிரியாகும். எனவே தம்முடன் ராணுவக் கூட்டில் சேர்ந்துள்ள ஒரு நாடு அதனுடன் ஒப்பந்தம் செய்வதை அமெரிக்கா விரும்பாது. மேற்கு நாடுகள் இதுபற்றிக் கவலைப்பட ஆரம்பித்திருக்கின்றன எனத்தெரிகிறது.

ரஷ்யாவோ, வேறொருவகையில் இதை விரும்பவில்லை. காஷ்மீர் இந்தியாவுக்குச் சொந்தம் என ரஷ்யா பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. சீனவோ, இது பற்றி இன்னும் தன் கருத்தை வெளியிடாமல் மௌனமாய் இருந்தது. ஆனல் புதிய எல்லைப்பேச்சு, அஸாத் காஷ்மீரை பாகிஸ்தானின் பிராந்தியமாக சீனஏற்றுக் கொள்கிறதென்பதையே காட்டுகிறது. ஏற்கனவே ரஷ்யாவுக்கும் சீனவுக்குமிடையே உள்ள கொள்கை வித்தியாசம், சீனவின்நடவடிக்கையினல்ரஷ்யாவுக்கு மேலும் ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கலாம்.

மேலும், காஷ்மீரில் மீண்டும் படையெடுக்க மலை ஜாதியினரை பாகிஸ்தான் திரட்டி வருவதாயும், ஆனல் இதற்குப் போதுமான ஆதரவு இல்லை என்றும் கூறப்படுகிறது. சீனவுடன் பாகிஸ்தான் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்த்து அஸாத் காஷ்மீரிலேயே பல கூட்டங்கள் நடத்தப்பட்டதாயும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவின் உறுதியான நிலை இப்போது பாகிஸ்தானுக்கு மிகத்தெளிவாக விளங்கி விட்டது. அடுத்த நடவடிக்கை என்ன என்பதே கேள்வி.

மீண்டும் காஷ்மீரில் படையெடுப்பு நடைபெறுமா? யுத்த நிறுத்த எல்லைக்கோடு மீறப்படுமா? இவ்விதம் நடைபெறுமானல் பெரும் அபாயம் ஏற்படும். இந்தியாவின் உறுதியை மாற்ற மீண்டும் படையெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என பாகிஸ்தான் இப்போது எண்ணிக்கொண்டிருந்தால் அது ஆச்சரியமில்லை.

இந்த நிலைமையையும் இந்தியா எதிர்பார்த்திருப்பதாகவே தெரிகிறது. ரஷ்யாவிலிருந்துபுதிதாகப் பல போர் விமானங்களை வாங்குவதன் மூலம் தனது விமானசக்தியை இந்தியா பலப்படுத்தி வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனல் காஷ்மீரில் இனி படையெடுப்பு நிகழுமானல் பல அரசியல் விளைவுகளை ஏற்படுத்துவது மட்டுமின்றி, உலகின் ஒரு பகுதியில் சமாதானத்தையே குலைத்துவிடும் என்பதிலும் சந்தேகமில்லை. காஷ்மீரில் இப்போது ஒரு முடிச்சு விழுந்திருக்கிறது. இந்தச்சிக்கலான முடிச்சை மிகவும் ஜாக்கிரதையாக அவிழ்க்க வேண்டும் என்பதே புதிய நிலையாகும்.

## ரஷ்யா மிரட்டல்

அமெரிக்கா அணு சோதனையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து ரஷ்யாவும் அணு சோதனையை ஆரம்பிக்கப் போவதாய் மாஸ்கோரேடியோ மிரட்டியிருக்கிறது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்க்காமல் விடக் கூடாது என மாஸ்கோ அறிவித்துள்ளது. இந்த ஆயுதப் போட்டிக்கு முடிவே இல்லையா? இந்த ஆயுதப் போட்டியையும், கெடுபிடி யுத்தத்தையும் ஒழிக்க வேண்டுமானல் ஒரு அதிசயம் தான் நிகழவேண்டும். ஜனநாயக முதலாளித்துவ அமைப்பை கம்யூனிஸ்ட் நாடுகள் ஏற்கவேண்டும்.அல்லது கம்யூனிஸத்தைமுதலாளித்வ நாடுகள் தழுவ வேண்டும். இரண்டில் ஒன்றைத் தவிர வேறுவழி கிடையாது போல் தோன்றுகிறது. ஆனல் இது கற்பனையிலும் நடக்க முடியாத விஷயமாகும். அமெரிக்க அணு சோதனையை எதிர்த்து உலகின் இதரபகுதிகளில் மட்டுமின்றி அமெரிக்காவிலேயே கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

ஆனல் ரஷ்ய முடிவை எதிர்த்து ரஷ்யாவில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறதா? மக்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்களா? தலைவர்களின் முடிவை எதிர்க்க அங்கு யாருக்குத் துணிச்சல் உண்டு?

ஆயுதபரிகரணம் வெறும் கனவு என்பதும், அணுஆயுத ஒழிப்பு வெறும் கற்பனை என்பதுமே நாம் கொள்ளக்கூடிய அபிப்பிராயமாகும். இந்தப் பிரச்னை கட்டுப்படுத்த முடியாதபடி மனிதசக்தியை மீறி விட்டது. கடவுள் தான் இனி உலகைக் காக்க வேண்டும்.

## அல்ஜீரிய படுகளம்

அல்ஜீரிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் விதத்தைப் பார்த்தால் ஒரு வகையில் வருத்தம் உண்டாகிறது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக, அந்நாட்டில் பயங்கரவாதிகளின் கொட்டத்தை அடக்கி, அமைதியை நிலைநாட்டவேண்டியது பிரெஞ்சு துருப்புக்களின் பொறுப்பாகும். ஆனல் இப்போது நடைபெறுவது என்ன? ஜெனரல் சலான் உட்பட ஓ. ஏ. எஸ். பயங்கரவாதிகளின் முக்கிய தலைவர்கள் எல்லாம் கைதுசெய்யப்பட்டு விட்டது உண்மைதான். அல்ஜீரியர்ஸிலும், ஓரானிலுமுள்ள மேலும் பல பயங்கரவாதிகள் பிடிக்கப் பட்டுவிட்டார்கள் என்பதும் உண்மையே. ஆயினும் அல்ஜீரிய மாதா இன்றும் படுகளத்தில் பலியாகிவருகிருள். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின் ஒரே தினத்தில் 110பேர் அங்கு கொல்லப் பட்டிருக்கிருர்கள். சராசரி மரணவிகிதம் 20 முதல் 25 வரை அங்கு இன்னும் இருந்துவருகிறது. ஒப்பந்தத்துக்கு முன்பு இருந்த மரண விகிதத்துக்கும், இப்போதைய விகிதத்துக்கும் வித்தியாசமில்லை. பிரெஞ்சுத்துருப்புக்களும் அவர்களது ஆயுதங்களும் அங்கு என்ன செய்கின்றன என்பதே தெரியவில்லை. அமைதியை நிலைநாட்டுவதில் பிரெஞ்சுக் காரர்களுக்குச் சக்தி இல்லை என்று கூறுவதா, அல்லது வேணடுமென்றே அராஜகத்தைப் பார்த்தும் பாராதது போல் அவர்கள் நடந்துகொள்கிருர்களா என்பதும் தெரியவில்லை. தங்களால் முடியாவிட்டால் அவர்கள் அமைதியை நிலைநாட்டும் பூரண பொறுப்பையும் இடைக்கால நிர்வாக சபையிடம் ஒப்படைத்து விடுவதே முறை. ஹங்கேரிய எழுச்சியை ரஷ்யர்கள் எவ்விதம் அடக்கினர்களோ அவ்விதமே அல்ஜீரிய பயங்கரவாதிகள் ஈவிரக்கமின்றி அடக்கப்பட வேண்டும். ஹங்கேரி எழுச்சியையும், ஓ.ஏ.எஸ். காடைத்தனத்தையும் நாம் ஒன்ருக ஒப்பிட்டுப் பேசவில்லை. ஹங்கேரியில் எழுந்தது சுதந்திரக் கிளர்ச்சி. ஆனல் அல்ஜீரியாவில் நடப்பதோ காடைத்தனம். ஈவிரக்கமின்றி எவ்விதம் அடக்கப்பட வேண்டும் என்பதற்கு தாராளமாகவே ஹங்கேரிய அடக்கு முறையைக் குறிப்பிடுகிறோம். அல்ஜீயர்ஸ், ஓரான் ஆகிய இடங்களிலுள்ள ஐரோப்பியர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கவேண்டும். நிபந்தனையின்றி பயங்கரவாதிகள் குறிப்பிட்ட தேதிக்குள் சரணகதி அடைய வேண்டுமென்று கோரப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் சரணகதியடையாவிட்டால் ஐரோப்பியரின் வாசஸ்தலங்கள் தரை மட்டமாக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கவேண்டும். இவ்விதப் போர்நடவடிக்கையின் மூலமே அல்ஜீரியப் படுகொலையை நிறுத்தமுடியும். ஈவிரக்கமின்றி பிரான்ஸ் நடந்து கொள்வதிலேயே விஷயம் தங்கியிருக்கிறது.

அல்ஜீரிய முஸ்லிம்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. தங்கள் சகோதரர்களும், சகோதரிகளும் நாய்களைப்போல் தெருவில் சுட்டு வீழ்த்தப்படுவதை தொடர்ந்து எவ்வளவு நாட்கள்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

தேசியத் தலைவர்களின் கட்டுப்பாட்டுக்கு அவர்கள் இன்னும் உட்பட்டு இருக்கிருர்கள். "இம்" என்ருல் அவர்களும் கிளம்பிவிடுவார்கள். பின் உள்நாட்டுப்போர் தான். இந்த நிலைமை பிரான்சுக்கு நல்ல பெயரைக் கொண்டு வராது. எவ்வளவு சீக்கிரம் அங்கு அமைதி நிலவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிரான்சுக்கும், ஜெனரல் டிகாலுக்கும் நன்மை ஏற்படும்.

## வாழ்வின் இலட்சியம்

விஞ்ஞானத்தைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமெனின் முதலில் வாழ்வின் இலட்சியங்களைப் பற்றிய அறிவு வளர்க்கப்பட வேண்டும். அந்த இலட்சியங்கள் பண்பாடு, தத்துவம், சமயம் ஆகிய எவற்றின் அடிப்படையில் அமைந்தாலும் சரி, அத்தகைய உயர்ந்த லட்சியங்கள் மட்டும் இல்லையெனில், விஞ்ஞான அறிவும், அதன் அடிப்படையில் வளர்ச்சியுற்ற மனிதனின் இன்றைய நாகரிகமும் மனித இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத் தூண்டுகோலாக அமையும்.

—ராஜன்பாபு

## பூஜ்யம் தபால்

டாக்டர் எஸ்.
ராதாகிருஷ்ணன் அவர்கள்
ராஷ்டிரபதி,
புதுடில்லி.

தலைவரே!

நாற்பத்துமுக்கோடி மக்கள் வாழும் மகத்தான பாரத சமுதாயத்துக்குத் தலைவராகிய தாங்கள் ஜனதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பெற்று, இன்று பதவிஏற்பதை எண்ணி எண்ணி பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். ஈழத்தமிழர் சார்பாக தங்களுக்குத் தெரிவிக்கும் நல்வாழ்த்துக்களை தயவுசெய்து ஏற்க வேண்டுகிறேன்.

தங்கள் தாய்மொழி தெலுங்கென்றும், தாங்கள் ஆந்திரரென்றுமே பலரைப்போல் நானும் நினைத்திருந்தேன். ஆனல் சென்னைப் பத்திரிகையொன்று "நம் புதிய ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், பேராசிரியராக இருந்து குடியரசுத் தலைவராகும் தமிழர்" என்று கொட்டை எழுத்துக்களில் மகுடமிட்டு எழுதியுள்ளதைக் கண்டதும், வியப்புடன் அதைப் படித்துச் சிந்தித்தன்.

தாங்கள் தமிழகத்தைச் சேர்ந்த திருத்தணிகைக்குப் பக்கத்திலுள்ள சர்வபள்ளி எனும் கிராமத்தில் பிறந்தவர்கள். தங்கள் தந்தையாராகிய வீராச்சாமி ஐயா அவர்கள் தங்களுக்கு 'ராதா கிருஷ்ணன்' என்று "இன்னன்ன" வில் முடியத்தக்க விதமாக தமிழ் முறைப்படி பெயர் வைத்துள்ளதைக் காண்கையில் தாங்களும் தங்கள் குடும்பமும் தமிழ்ப்பண்புடனேயே வாழ்ந்தவர்களென்பதை உணர முடிகிறது. ஆந்திர பண்பாக இருப்பின் "ராதா கிருஷ்ண" என்று தங்கள் பெயர் இருந்திருக்குமல்லவா?

இதை ஒப்பாதவர்கள் கூட, தாங்கள் திராவிடர் என்பதை மறுக்க மாட்டார்கள். ஏனெனில் தமிழ், தெலுங்கு முதலியன திராவிடமொழிகள் தானே. அகில இந்தியாவுக்கும் ஜனதிபதியாக பதவிஏற்கும் முதல் திராவிடர் என்ற முறையில், தி. க. வும், தி. மு. க. வும் தங்களைப் பாராட்டக் காரணமுண்டு.

ஆனல் தங்கள் தேர்தலில் தி. மு. க. கட்சியினர் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் எதுவாயினும் சரி, ஒரு திராவிடரே இந்திய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதற்கும், தங்களது கிளர்ச்சியே மறைமுகமாக காரணமாக இருக்குமென்றும் அவர்கள் கொள்ளலாம்.

தமிழர், தெலுங்கர், அல்லது திராவிடர் என்று தங்களை அழைப்பது தங்களுக்குப்பிடிக்காதென்பது எனக்குத் தெரியும். தாங்கள் யாதும் ஊரே யாவரும் கேளிர், ஒன்றே குலமும் ஒருவரே தேவனும் என்ற கொள்கையின்படி அகில உலகமும் ஐக்கியப்பட்டு வாழவேண்டுமென்ற பெருநோக்க முள்ளவர்கள்.

தங்கள் இந்த மேலான லட்சியம் கைகூடுமா என்பது இன்றைய சூழ்நிலையில் மிகவும் சந்தேகமாகவே தோன்றுகின்றது. என்ருலும், தாங்கள் ராஷ்டிரபதியாக இருக்கும் காலத்தில், இந்த லட்சியம் கைகூட தாங்கள் கூடுமான முயற்சிகளைச் செய்வீர்களென்று நம்புவதுடன், அவை நல்ல வெற்றி அளிக்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு:-
தங்கள் மீது இலங்கை பிரதமருக்கு நல்ல மதிப்பும் மரியாதையுமுண்டு. தாங்களும் எங்கள் பிரதமரை "பதிவிரதை" என்று பாராட்டியுள்

(12-ம் பக்கம் பார்க்க)

# ஜனதிபதி பதவியிலிருந்து இளைப்பாறும் ராஜேந்திரப் பிரசாத்

## பத்தாண்டுகள் (1952—1962) இந்தியாவின் முதல் ராஷ்டிரபதியாக கடமையாற்றியவர்


### கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை அஹிம்சை ஆகியவற்றை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்ட பாரத புருஷர்

இந்திய குடியரசின் முதல் ஜனதிபதியான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களின் பதவிக்காலம் தற்போது முடிவடைகிறது. பிரசாத் அவர்களுக்கு இந்தியா பிரியாவிடையளிக்கும் காலமேற்பட்டுள்ளது. பெரும்பதவியேற்றுக் கடமை புரிந்தார் எனினும், பட்டத்தினாலோ பதவியினாலோ பெருமைகொள்ளாது தர்மநெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தார் இந்த அண்ணல். காந்திய நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்த இப்பெரியார் பொதுமக்களுடன் அன்பாகப் பழகி அவர்களிடையேயும் காந்திஜியின் கொள்கைகளைப் பரப்பினர். இந்த வகையில் பிரசாத் அவர்கள் ஆட்சிபீடத்திலிருந்து விலகிய பின்னரும் இந்திய மக்களுக்குத் தொண்டாற்றுவார் என்பதில் சந்தேகமில்லை. எளிமையும் சாந்தமும் நிறைந்த இவர் ஏழை மக்களிடத்தில் அன்புடையவர். நாட்டின் ஒற்றுமைக்காகவும் பொது நலனுக்காகவும் பாடுபட்ட இவர் சகிப்புத்தன்மையையும் சமாதான வாழ்க்கையையும் எப்பொழுதுமே வலியுறுத்தியுள்ளார். நாடுகளுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு சகிப்புத்தன்மையும் நல்லுணர்வும் அவசியம் என்பதை இவர் தமது சொற்பொழிவுகளின் போது அடிக்கடி எடுத்துக்கூறியுள்ளார்.

"இந்தியாவும் பாகிஸ்தானும் இரு அயல் நாடுகள். எனவே இரு நாடுகளுக்கும் நலனளிக்கும் வகையிலே நல்லுறவுகள் வைக்கப்படல்வேண்டும். இந்த இருநாட்டவர்களில் எந்தநாட்டு மக்களும் கிளர்ச்சி கொள்ளாத வகையில் எல்லைப்புறம் பாதுகாக்கப் படவேண்டம். சமூக ஒற்றுமைக்கும் அமைதி நிலைமைக்கும் பொறுமையுணர்ச்சியும் சகிப்புத்தன்மையும் இன்றியமையாதவை"

இவ்வாறு ஜனதிபதி, தாம் பதவியேற்றகாலத்தில், தமது வானெலிச்சொற்பொழிவொன்றின் போது கூறினர். தமது கொள்கையளவிலும் கடமையளவிலும் சமரசத்தையும் சகிப்புத்தன்மையையும் மேற்கொண்ட ஜனதிபதி பொது மக்களிடையேயும் அவற்றைப் பரப்ப முயன்றார்.

ராஜேந்திரபிரசாத் மனிதாபிமானம் மிக்கவர். இந்தியாவின் சுதந்திரப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தேசத்தலைவர்கள் பலர் சிறைகளை நிரப்பி இருந்தார்கள். இந்திய தேசிய தலைவர்களில் முதன்மை மிக்க இவர் இவர்களில் ஒருவராகவும் ஒரு சமயம் இருந்தார். ஒல்லியான தோற்றத்துடன் கதராடை அணிந்து கொண்டு சிறையில் இருந்த இவர் பாரதநாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய வீர புருஷர்களில் ஒருவர்.



ராஷ்டிரபதி விமானத்திலிருந்து இறங்குகிறார்

---


**ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் 1959-ல் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்த பொழுது எடுக்கப்பட்ட படங்களில் சில.**

---

1950-ம் ஆண்டில் இந்தியா குடியரசாயிற்று. இக்குடியரசின் முதல் ஜனதிபதியாக ராஜேந்திர பிரசாத் 1952-ம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டார். இந்திய மகனொருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பதவி இதுவே. இதே பதவிக்கு அவர் மீண்டும் 1957-ல் தெரிவு செய்யப்பட்டார். பாரதநாட்டு மக்கள் இவர் மீது கொண்டுள்ள பேரன்புக்கும் நன்மதிப்புக்கும் இது ஒரு எடுத்துக் காட்டாகும். ஜனதிபதியாகக் கடமையாற்றிய பிரசாத் பஞ்சசீலத்தின் உயர்வை உலகெங்கணும் எடுத்துரைத்துவந்துள்ளார்.

நாட்டுப்பற்றும் மனிதாபிமானமும் மிக்க ராஜேந்திரபிரசாத் அவர்கள் இலக்கியத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். இவர் பல மகாநாடுகளுக்குத் தலைமை வகித்துள்ளார். பத்திரிகைத் தொழிலிலும் நல்ல அனுபவம் வாய்ந்தவர். 'சேர்ச்லைற்' என்ற ஆங்கிலத் தினசரியைப் பாட்னவில் நிறுவியவர்களில் இவரும் ஒருவர். இந்தி, ஆங்கில வார இதழ்களை நிறுவிய பெருமையும் இவருக்குண்டு. டாக்டர் பிரசாத் வளம மிக்க ஒரு எழுத்தாளனுமாவர்.

உலகிலேயே இணையற்ற புருஷராக விளங்கிப் பாரத நாட்டின் பண்பாட்டிற்கேற்ப வாழ்ந்த பெருமை ராஜேந்திர பிரசாத்துக்கு உண்டு. கடமையுணர்ச்சியும் தியாகமனப்பான்மையும் தூய சிந்தையும் படைத்த இப் பெரியாரின் சேவையைப் பெறுவதற்குப் பாரதநாடு பெரும் பாக்கியம் பெற்றிருக்கவேண்டும் என்ருல் மிகையாகாது. இவருடைய பதவிக்காலம் முடிவடைந்தாலும் பாரதநாட்டுக்கு இவரது சேவை இனிமேலும் காத்திருக்கின்றதென்பதையிட்டுப் பாரத மக்கள் பெருமைப்படுவார்கள். பதவியிலிருந்து விலகியபின் சர்வோதய பணிக்கே தமது நேரம் முழுவதையும் அர்ப்பணிக்கப் போவதாக கடந்த ஆண்டில் ஆந்திரப்பிரதேசத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் அவர் அறிவித்தார். கண்ணியம் மிக்க இவரின் கடமை உணர்ச்சியையிட்டு மக்கள் மகிழ்ச்சிகொள்ளாமல் இருக்கமுடியுமா?



இளைப்பாறும் இந்திய ஜனதிபதி ராஜேந்திரப் பிரசாத்



பலாலி விமான நிலையத்தில் காங்கேசன்துறை பிரதிநிதி திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம். யாழ். நகர சபை மேயர் திரு. அல்பிரெட் துரையப்பா அப்பொழுது யாழ். நகர் பாராளுமன்றப் பிரதிநிதியான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் இந்திய ஜனதிபதியை வரவேற்கும் காட்சி.



விமான நிலையத்தில் வரவேற்பு



யாழ். மாநகரசபையினரால் ஜனதிபதிக்கு வழங்கப்பட்ட வரவேற்பு உபசாரம்

ஈழப்பாட்டனின் கடிதங்கள்

# 'கொத்தலாவலையின் அதட்டி, உரப்பி, அழப்பி, குழப்பும் பேச்சு'

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனத்தில் அமர்தல் மூலம், ஆமோதிப்பதற்கு அடையாளமாகப் பாவனைசெய்தல் வேண்டும். அதன்படி எல்லோரும் பேசி முடிய, விவாத நேரத்துள் இறுதியாக நான் மீட்டும்யாவையும் பேசலாம். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் சார்பில் முக்கிய பேச்சாளரைத் தொடர்ந்து பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அரசாங்க பிரதம பேச்சாளர் பிரதமர் கொத்தலாவலையே தான். இன்னும், விவாதத்தைப் பூர்த்தி செய்வது எனது பொறுப்பாயிற்று. சம்பிரதாயப்படிக்கு, பார்லிமெண்ட்சபை முதல்வர் ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் கலந்து இந்த ஒழுங்கு முறைகளைத் தெரிவித்துக்கொண்ட பின் யாவும் திடமாயிற்று.

## எனது பதில்

சரியாக பி. ப. 7 மணிக்கு இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பது நியதியாயிற்று. ஜே.ஆர். ஜெயவர்த்தன மனம் குழம்பிய நிலையில் காணப்பட்டார். தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தான் எனது பிரேரணை ஆரம்பம். பார்லிமெண்ட் சிற்றுண்டிச்சாலையில் அவர் என்னிடம் வந்து, ஏனையோரையும் தூண்டி சாதுரியமாகப் புத்திமதி கூறி வசப்படுத்திவிட்டால் கடைசி நேரத்திலும் பிரேரணையை விவாதிக்காது கைவிட வழி பிறக்குமென வேண்டினார். நான் இந்தச் சாராம்சப்பட அவருக்குப் பதில் சொன்னேன்: "என்னைப் பொறுத்த வரையில் நான் சம்மதம். ஆனல் இது ஒரு பொதுவிஷயம். இதில் நானும் ஒருவனுகச் சம்பந்தப்பட்டுக் கொண்டேன். அவரவர் உரிமையும் அவரவருக்குண்டு. நான் அதில் தலையிடுவது முறையல்ல. எனது செல்மதியை மற்றவர் மீது எல்லைமீறிச் செலுத்துவதே நேர்மை நெறியாகாது. நீங்கள், அப்படியானல், அவர்கள் ஒவ்வொருவரையும் நேரடியாகக் கண்டு பேசி அவர்களைத் திருப்திப்படுத்தி இணங்கச் செய்தலே சரியான பாதை. கடைப்பிடிக்கும் மார்க்கத்தில் கடைசி வரைக்கும் நாம் பிழை விடக்கூடாது". அந்த வேளையில் சிற்றுண்டிச் சாலையில் பீட்டர் கெனமனும், வில்லியம் சில்வாவும் இருந்தனர். அவர்கள் இருவரையும் நான் அழைத்தேன். ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வேண்டுகோளை அவரின் முகதாவில் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களை ஜே. ஆர். உடன் கலந்து பேசி முடிவு கட்டச் சொன்னேன். என். எம். அங்கே அந்த வேளையில் இல்லை. ஜயவர்த்தனவின் பேச்சிலிருந்து என். எம்முடன் நேரகாலத்தோடு கலந்து கொள்ளப்பட்டது போலவும் பிரேரணையின்மீது, சாதுவாகப் பேசுவார் போலவும் நான் ஊகிக்க முடிந்தது. சற்று நேரத்திற்குள், எல்லோரும் பிரதமர் கொத்தலாவலையை அவர் அறையில் சந்தித்துப் பேசித் தீர்க்கமானதொரு முடிவுக்கு வருவோமெனப் புத்தி சொன்னேன். ஏற்றுக்கொள்ளப் பட்டது. நாங்கள் பிரதமர் அறைக்குச் சென்றோம்.

## மணிஓசை வரும் முன்னே

பிரதமர் கொத்தலாவலையுடன் அவரின் அந்தரங்கக் காரியதரிசி பி. நடேசன், தான் பிரதமருக்குத் தயார்செய்த விபரவிளக்கக் குறிப்புரையுடன் காணப்பட்டார். பேர் புகழும், பெருங்குணமும் மிக்க அறிஞர் — அருணசலம் அவர்களின் பேரர் பி. நடேசன் ஆவர். பிரதமர் கொத்தலாவலை, பிரேரணை மீது விவாதத்திற்கு தனது அந்தரங்கக் காரியதரிசியின் ஆராய்ச்சிக் குறிப்புரையைப் படித்து ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். கொத்தலாவலை, சுபாவமான 'அதட்டி, உரப்பி, அழப்பி குழப்பும்' பேச்சை எங்கள் மீதும் விட்டுப் பார்த்தார். நான் இடங்கொடுக்கவில்லை. ஒலிவர்குணத்திலக்காவுக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கும் குற்றச்சாட்டுகள் யாவும் 'பச்சைப் பொய்', 'மகாதப்பிதம்' என்றெல்லாம் மிரட்டல் செய்தார். எனது காரியதரிசி நடேசனைப் பார்த்து தான் பார்லிமெண்டில் வாசித்துக் காண்பிப்பதற்குத் தயார் செய்யப்பட்ட அந்தப் பகுதியை எமக்கு வாசித்துக்காட்டும்படி கூறினர். நடேசன் வாசித்தார். நான் கூர்ந்து கவனித்தேன். அவர் வாசித்த அந்தப் பகுதியில் ஒரு காணியைபபற்றிய விற்பனவு-கொள்வனவு விபரம் காட்டப்பட்டிருந்தது. உடனே குறுக்கிட்டு கேள்வியைக் கேட்டேன்: 'ட்றைன்' பத்திரிகைக் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் காணிக்கு அமைந்த காணியா இது?" முன்யோசனை எதுவுமின்றி "ஆம்" என்று பதிலளித்தார் காரியதரிசி நடேசன். எரியும் நெருப்பில் வெண்ணெய் போட்டது போலாகிவிட்டது நிலைமை. உலவம் எதுவுமின்றி, உண்மையை அறிந்த மட்டில், அவ்விடத்திலே கொத்தலாவலைக்கு உரை செய்தேன். அதிர்ஷ்டவசமாக ஒலித்தது 'கோறம்' மணி ஓசை! அதிர்ஷ்டம் வரும் பின்னே - மணி ஓசை வரும் முன்னேஎன்றுசொல்ல தோன்றியது! தேநீர் இடைவேளை முடிந்தது. சம்பாஷணையைத் திடீரென நிறுத்துவதே எனக்குச் சரியெனப்பட்டது. நான் எழுந்தேன். அனைவரும் எழுந்தனர். அப்பால் சென்று எங்கள் பாட்டில் ஏமதிடம் நோக்கி விரைந்தோம்.

## இருவரும் சந்தித்தோம்

ஜே. ஆர். ஜயவர்த்தன இன்னும் என்னைப் பின்தொடர்ந்து எதிர்க்கட்சியினர் ஊடாடும் லொபி மண்டபத்திற்குள் வந்தார். "சுந்! நாம் இனி என்ன செய்யலாம்?" - தனித்து சிலநிமிடங்கள் இருவரும் சேர்ந்து சிந்தித்தோம். திடீரென எனக்கொரு சித்தத் தெளிவு ஏற்பட்டது. பிரேரணை பிரேரித்து அனுமதிக்கப்பட்டுப் பிரதமர் அதற்குப் பதிலளித்தவுடன், அரசாங்கத்தின் சார்பில் அங்கத்தவர் ஒருவர் எழுந்து ஒரு ஒழுங்குப்பிரச்சினையை (பொயின்ற்ஒவ்ஓடர்) எழுப்பவேண்டும். அதாவது: "இந்த விஷயம் ஒரு தனி மனிதரின் நடைமுறையைப் பாரதூரமாகப் பாதிக்கும் காரணத்தால், மானநஷ்டப் பாரதூரக் குற்றச்சாட்டின் மீது வழக்காரம்பித்து நடத்தச் சட்டப்படி இடமுண்டு. 'ட்றைன்' பத்திரிகை மீது விரைவில் வழக்குத் தொடரப்படும். அச்சமயம் இவ்விஷயம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்படும். அப்படி நடப்பின் நீதிமுறைக்கு கோர்ட்டில் நீதிபதிக்கு அமையும் நாட்டின் சட்டப்படி, பார்லிமெண்ட் அடிப்படைச் சம்பிரதாயப்படி, கோர்ட்டில் வழக்காகிய அல்லது வழக்காடும் விஷயமெதுவும் விவாதிக்கப்படக் கூடாது! நாட்டில் மக்கள் அபிப்பிராயம் அதிக அக்கறையுடன் இருப்பதால் இப் பிரேரணையைப் பார்லிமெண்டுக்குக் கொண்டுவந்தேயாக வேண்டும். பிரதமர் கொத்தலாவல இயன்றவரையில் ஆவேசமாகத் தன் பிரசங்கத்தை நிகழ்த்த வேண்டும். என். எம். பெரேரா நேரகாலத்தோடு தனது பேச்சுக் குரலைச் சாந்தமாக்கி நோகாமல் பேசுவாரென்று அறிகிறோம். ஆகவே, ஆலோசித்துள்ள கோர்ட்டு வழக்குச் சம்பந்தமான ஒழுங்குப் பிரச்சினையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துதல் முக்கியமானது. நீங்கள் கௌரவ சபாநாயகரை அவர் அறையில் சந்தித்துக் கலந்து கொள்ள வேண்டும். அவரை உங்கள் வசப்படுத்தி, நீங்கள் சொல்வது நியாயமானது என்பதை அவர் பூரணமாக ஏற்றுக் கொள்ளச் செய்வது உங்கள் கெட்டித்தனத்தைப் பொறுத்தது. அடுத்து 15 நிமிட ஓய்வு வேளை வரும்போது, கௌரவ சபாநாயகரைச் சந்திப்பது பொருத்தமானது. இதுவே உகந்த வழியும், ஒரே மார்க்கமும், வெற்றிக்குப் பாதையும்" என்று எனக்குதயமான புத்தியை எடுத்துரைத்தேன்.

## லொபி மண்டபத்தில்

ஓய்வு நேர இடைவேளைக்காகச் சபை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், நானும், ஏனையோரும் மத்திய லொபி மண்டபத்தில் சென்று சேர்ந்தோம். அப்போது ஜே. ஆர். கௌரவ சபாநாயகரின் அறை நோக்கி விரைந்து கொண்டிருப்பதை நான் அவதானித்துக் கொண்டேன். நான். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைக் கேட்டேன், "எனது விருப்பப்படி, பிரேரணையை நான் அனுவதிக்கும்போது பேசுவதற்குச் சந்தர்ப்பமளிக்க இணங்க வேண்டும்" என்று. "முடியவே முடியாது. சுந்தரே, நீங்கள் அப்படிச் செய்ய எத்தனிக்கவொண்ணாது முதல் தாக்கவெடி தீர்ப்பது என் வேலை. அந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு நீங்கள் தரவேண்டும். நாங்கள் முன்னுடியே செய்து கொண்ட ஒழுங்கின்படி நீங்கள் பேசக் கடைசியில் உங்களுக்குச் சந்தர்ப்பமிருக்கிறது" என்று எனக்குக் குறுக்கிப் பதில் கொடுத்தார் பண்டாரநாயக்கா. இப்படி நாங்கள் இருவரும் சல்லாபித்துக் கொண்டு நிற்கும்போது, ஜே. ஆர். ஜயவர்த்தன எதிர்த்திசையிலிருந்து லொபிமண்டப நடைமுற்றத்தால் வந்து கொண்டிருந்தார். கௌரவ சபாநாயகர் அறையிலிருந்து ஜே. ஆர். வெளியேறியதும், என்னைக் காணக் கூடியதாக எதிர்த்திசையிலே நான் நின்றேன். அவர் என்னைப் பார்த்து, இமைகொட்டிப் புன்னகைச் சிரிப்புச் சிரித்தார். அதிலிருந்து "எங்கள் திட்டமெல்லாம் ஒழுங்குப்படி நிறைவேறும்". என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.

## எனது பேசாத பேச்சு

ஓய்வுநேர இடைவேளைமுடிந்ததும் 'கோறம்' மணி நாதம் புரிந்தது. என். எம். பிரேரணையைக் கொண்டு வந்து 'நைசான' ஒரு பேச்சைப்பேசினர். கொந்ததும் நோகாததுமாகப் பேசி முடித்தார். கலாநிதி (டாக்டர்) பட்டம் பெற்றவர் என்பதைக் கண்டு கொள்ளக்கூடிய வகையில் விருத்தியுரை விமர்சனத்தில் ஈடுபட்டார். நாணயம் அச்சிட்டு வெளியிடுவதைக் கட்டுப்படுத்தும் சட்டம் பற்றி நீண்டநேரம் தன் பேச்சில் ஒரு ஆராய்ச்சி நடத்தி முடித்தார்! நான் எனது ஆசனத்திலிருந்தும் எழுந்துநின்றேன். கௌரவ சபாநாயகரைப் பார்த்து, என் தலையைக்குனிந்து, புன்னகைச் சிரிப்புடன், ஆமோதித்ததற்கு அடையாளமாகச் செய்தபின், ஆசனத்திலமர்ந்தேன். எதிர்பார்த்தபடி, எனது "பேசாத பேச்சை"க் கண்டு கேட்டின்புற்ருர் பிரதமர் கொத்தலாவல. தனது அந்தரங்கக்காரியதரிசி தயாரித்துக்கொடுத்த விளக்கக் குறிப்பு விமரிசனத்தை அப்படியே அள்ளிப்பொழிந்துவிட்டார். ஆங்காங்கே இடையுரைகளும், தடையுரைகளுமாய் இருந்தனவன்றி வேறு எதிர்ப்புக்குண்டுகள் ஒன்றும் அவர் மீது இலக்காகவில்லை. பிரதமர் கொத்தலாவல, பி. நடேசன் தயாரித்த பிரசங்கத்தை நிகழ்த்தியமர்ந்தார். அதைத் தொடர்ந்து முன்னைநாள் மன்னர் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரும், தபால், தந்திமந்திரியும், அப்போது அரசாங்கக்கட்சியின் பின்னசனப் பிரமுகருமான சிற்றம்பலம் எழுந்தார். முன்னுடியே முன்னசன முதல்வர் ஜே. ஆர். ஜயவர்த்தன அவருக்கு வடிவாகச் சொல்லித் தயார் செய்து வைத்திருந்ததின் வண்ணம், ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினர். பீட்டர் கெனமன் அதற்கு ஒரு சில மறுப்புரைகளை மொழிந்தார்.

## ஏளனத்தில் முடிந்தது

கௌரவ சபாநாயகர் மிகவும் சரியானதென்று கண்டு ஒழுங்குப்பிரச்சினையை ஏற்றுக்கொண்டார். பிரேரணை மீது திட்டமிட்ட வாக்குவாதம் ஏளனத்தில், முழுக்கேவலத்தில் சடுதியாய் முடிந்தது. பிரேரணை மீது நடக்கவிருந்த விவாதத்தைக் கண்டுகேட்டுச் சுவைக்க கலரியில் நிறைந்திருந்த மக்கள் கூட்டம் மிகுந்த ஏமாற்றத்துடன் அவ்விடம் விட்டகன்றனர். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அடக்க முடியாத ஆத்திரத்துடன் ஆவேசமாகஅங்கிருந்து புறப்பட்டுச் சென்றுர்! இப்படியான பெரும் "தகடு வாங்கித் தொய்ய" வேண்டிவரும் என்பதை அவர் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை! அவர், ஒலிவருக்கெதிராகத் தயார் செய்து வைத்திருந்த அதிர்வேட்டுகளும், அவப்பேச்சுகளும் அவரின் அலங்காரப் பேச்சுவன்மையுடன் சேர்ந்து, அனைவரையும் அதிசயிக்கச் செய்யும் திட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டது! பாவம், அவருடைய சூரத்தனமான பேச்சு விபரங்கள் அவருக்கன்றி வேறெவருக்கும் தெரியாமல் போய்விட்டன!

கத்திமுனையிலும் புத்திமுனை எத்தனையோ மடங்குபலமும், சிறப்பும் மிக்கது. கலக்கமும், திகிலுமான சூழ்நிலையில் இலக்குவைத்துக் கருமம் ஆற்றுதல் செயற்கரிய கருமங்களையும் சிறு பிரயத்தனத்துடன் செய்துமுடித்துவிடலாம்.

## ஒலிவரின் அழைப்பு

அடுத்த நாள் அதிகாலை 6-30 மணியிருக்கும்; அறையில் டெலிபோன் மணி ஒலித்தது. அதுவரையும் படுக்கைவிட்டு நான் எழும்பவில்லை. என் மகள் ஒருவர் டெலிபோனுக்கு மறுமொழி கூற றிசீவரைக் கையில் எடுத்தார். அவ்விடமிருந்து கொண்டே "ஐயா, குயின்ஸ் ஹௌஸ் ஒன் த போன்" ("ஐயா, இராணி மாளிகையிலிருந்து டெலிபோன்") எனச் சத்தம் செய்தார். நான் டெலிபோனுக்குச் சென்றேன். 'சுந்தரா' – 'அது நீங்களா, பாரியாரும் நீங்களும் இன்று சாயந்தரம் இவ்விடம் ஒரு சிறு விருந்துக்குக் கட்டாயமாக வரவேண்டும்; ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.' 'மிச்சம் சரி, ஒலிவர்'- 'மிகவும் உபகாரம்.' பார்லிமெண்ட் சபையின் பின்னணியில், லொபி மண்டபத்தில்

(11-ம் பக்கம் பார்க்க)




இன்றே எழுதி
ராணி பரிசுத் திட்டப்
புத்தகத்தைப் பெறுங்கள்

ரோஜா மலர்
போன்ற
மிருதுவான
சருமத்திற்கு

சருமத்தின் இரகசியங்களை நவீன விஞ்ஞானம் அறிந்து வைத்திருக்கிறது. ராணி சந்தன சோப்பை உபயோகித்தீர்களானல், ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்தை நீங்களும் பெறலாம். ராணி சோப், சருமத்தை ஊடுருவிச் சுத்திகரித்து சகல அழுக்குகளையும் வெளியேற்றுகிறது. பின்னர், ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் மூலம், சருமத்தை மிருதுவாக்குகிறது. அழகின் இரகசியம் சருமத்தைஊடுருவிச்சுத்திகரிக்கும் சோப். ராணி, இதற்கெனவே உருவான சோப்.



ராணி சந்தன சோப்

விஜய இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்
தபாற் பெட்டி 21, கொழும்பு

GC. S/1

# சித்திகரமாக ஆடு வளர்த்தற்கு சில குறிப்புகள்

ஏனைய மிருக வளர்ப்புகளைக் காட்டிலும் ஆடுவளர்த்தல் மிகவும் இலாபகரமானது. இவற்றிற்கு வீடமைத்தலும், தீன் ஊட்டலும் சொற்ப செலவுடன் செய்து கொள்ளலாம். நியாயமான கவனத்துடன் பாரதூரமான அழிவுகள் வராமற் தடைசெய்யலாம்.

மிகவும் சாதாரணமான கொட்டில் போதுமானது. ஈரத்தன்மை உள்ள இடத்தில் வளர்க்கும் போது பாரிசவாத சம்பந்தமான நோயால் இவை இலகுவில் பாதிக்கப்படுவனவாகையால் கொட்டிலே நிலமட்டத்திலிருந்து 4 அடி உயரத்தில் அமைத்தல் நலம். காற்று நேரடியாகப் பிடியாவண்ணம் பக்கங்களையும் 4 அடி உயரத்திற்கு மூட வேண்டும். நிலமும் பலகையால் அமைக்கப்படும். மத்தியில் உயரமாகவிட்டு அமைத்தலால் சிறுநீர், புழுக்கை முதலியவற்றை சுலபமாக அகற்றலாம்.

தீன் ஊட்டுவதில் சிரமம் ஒன்றும் கிடையாது. மாடுகள் சிறந்து வாழமுடியாத இடங்களிலும் இவை இலைகளையும் சுள்ளிகளையும் கட்டைகளையும் உண்டு வாழ்பன. கடாக்களுக்கு 1-2 இருத்தல் அடர் தீன் கொடுத்தல் வேண்டும். இதற்குத் தேங்காய்ப் பிண்ணாக்கும் தவிடும் உபயோகிக்கலாம்.

இளங்குட்டிகளை இனம் பெருக்க விடுதல் கூடாது. மறிக்குட்டிகளை 12-15 மாதங்களில் இனம் பெருக்க விடலாம்.

## ஆடுகளுக்குச் சம்பவிக்கும் நோய்கள்:

பாரிசவாதம் (Goat paralysis), நாலாம் குடலிலுள்ள சீறு புழுக்களாலுண்டாகும் அன்னுசய நோய் (Gastrits), தொற்று நுரையீரற் காய்ச்சல் சொறிவு அல்லது சிரங்கு (Mange) முக்கியம்.

புதிதாகக் கொள்வனவு செய்யும் ஆடுகளைக் குறைந்தது 2 கிழமைகளுக்காவது புறம்பாக வைத்து அதன் பின்னரே பட்டியுடன் விடல் வேண்டும். இல்லாவிடின் புது நோய்களைப் பட்டிக்குள் பரப்புதல் கூடும்.

மிகத் திறமையான
பவர்ஸ்
உரங்கள்
கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்
லாபகரமாய் பயிரிட
- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்
கிடைக்குமிடம்
ஏ. பவர்
அன் கொம்பனி லிமிட்டெட்,
த. பெ. 11, கொழும்பு.

# விவசாயத்துறையில் காற்றின் தீங்கு

## கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்

**காற்று உயிர்களுக்குப் பலவகையில் உதவுகிறது. ஆனால், அதனால் ஏற்படும் தீங்குகளும் பல. விவசாயத்திற்குக் காற்றினால் ஏற்படும் நன்மை தீமைகளைத் தெரிந்துகொண்டால் தீமைகளை அகற்றி நன்மைகளை மட்டும் பெற வழிகாணலாம்.**

காற்று உலகத்து உயிர்களுக்குத் தேவை. கோடை காலத்தில் காற்று வீசாவிடில் வெப்பம் தாங்க முடியாது. ஆனால் அந்தக் காற்றே ஓங்கி அடித்தால் சூறாவளியாகவும், சுழல் காற்றாகவும்மாறி உயிர்களுக்கு அழிவு விளைவிக்கும்.

விவசாயத்தில் காற்றின் உதவியால் ஏற்படும் சில தன்மைகள் உண்டு. விதைகள் பரவுவதற்குக் காற்று உதவுகிறது. செடி வளர்ச்சிக்கான சில வாயு உணவுகள் காற்றிலிருந்து கிடைக்கின்றன. ஆனாலும் காற்றால் விவசாயத்துறையில் ஏற்படும் தீங்குகள் பலவாக இருக்கின்றன. காற்றின் தீங்குகளைக் கட்டுப்படுத்தி இருக்காவிடில் நாட்டின் விவசாய உற்பத்தியில் பல கோடி ரூபாய்களை நாம் இழக்கநேரிடும்.

### காற்றால் ஏற்படும் நில அரிப்பு

காற்றினால் ஏற்படும் தீங்குகளில் மண் அரிப்பு மிகப் பெரிய தீங்காகும். காற்று வீசும்போது மண் சிறிது சிறிதாக அரிக்கப்படுவதால் நிலவளம் குறைந்து போகிறது. காற்று வளமான மண்ணை அள்ளிக் கொண்டு போய் விடுவதோடு பல சமயங்களில் மண்ணைக் கொண்டுவந்தும் மேடாகக் குவித்து விடுகிறது. கடலுக்கு வெகுதூரமுள்ள உள் பிரதேசங்களில் இப்படிப்பட்ட தொல்லைகள் இல்லையெனினும் அங்கு நிலத்தின் மேற்படிவத்திலுள்ளமென்மையான கரிமம் நிறைந்த புழுதி மண்ணைக் காற்றுக் கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கும் கொடுமை இப்போதும் நிகழ்ந்துகொண்டே வருகிறது வெயில் காலத்தில் மேல் மண் நன்றாகக் காய்ந்து இலேசாக இருக்கும், அப்போது வீசும் வெப்பக்காற்று அந்த மண்ணையும் களிமண், வண்டல் அம்சங்களையும் அடித்துக்கொண்டு சென்றுவிடும். பின்னர் காரமில்லாத சுரசுப்பான தரைப் பகுதி மட்டுமே எஞ்சி இருக்கும். இவ்விதம் மண் சிறிது சிறிதாக அரிக்கப்படுவதைத் தடுக்காவிட்டால் நிலவளம் குறைவதோடு வேறுசில சமூக நலக்கேடுகளும் உண்டாகும். காற்றால் இடம் பெயர்த்துக் கொண்டு வரப்படும் மண்வீடுகளுக்குள்ளும் பண்ணை இயந்திரங்களிலும் நிரப்பப்படுகிறது. அதனால் பண்ணை இயந்திரங்கள் தேய்மானம் அதிகரிக்கும். மேலும் அம்மண் பயிர்களை மூடி அழுக்கிவிடுவதும் வேலிகளை மூடிப்புதைத்துவிடுவதும் உண்டு. போக்குவரத்துச் சாலைகளும் ரயில்பாதைகளும் கூட இப்படிப்பட்ட மண்ணில் புதையுண்டு விடுவது இயல்பாக இருக்கிறது.

### விளைவுக் குறைவு

கடும் காற்றடிக்கும் போது பழத்தோட்டங்களில் உள்ள பிஞ்சுகளும் பூவும் உதிர்ந்து விடுகின்றன. விளை பயிர்கள் சாய்ந்துவிடுகின்றன. தானிய மணிகள் உதிர்ந்து மண்ணில் புதைந்து போவதும் உண்டு. பல சமயங்களில் பல ஆண்டுகள் வளர்ந்த மரங்களைக்கூடக் காற்று ஒரே விநாடியில் சாய்த்துவிடுகிறது. கோடைக் காலத்தில் காற்று அடிக்கும் போது மண்ணில் ஈரம் விரைவில் காய்ந்து போய்அதனாலும் பயிர்களுக்கு வரட்சி ஏற்படுகிறது. தாவரங்கள் அதிகமாகத் தண்ணீரை இழக்கின்றன. இப்படிக் காற்று அடிப்பதன் காரணமாக ஏற்படும் வரட்சியால் விளைவு மிகவும்குறைந்து போவதாகக் கண்டுள்ளார்கள். மேலைநாடுகளில் இந்த உண்மையைக்கண்டு காற்றுத் தடுப்புக்குவிவசாயத்தில்அதிக முக்கியத்துவம் கொடுததுவருகிறார்கள்.

### காற்றுத் தடுப்பு முறைகள்

காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதற்குச் சாதகமாக உள்ளவைகள் மண்ணில் மேல்மூடி போல் விளங்கும் தாவரங்கள் இல்லாமை. வரட்சியான பருவம், கால் நடைகள் நடத்தலால் சிதைத்தல் முதலியனவாம். எனவே மண்அரிப்பைத் தடுக்க முதலில் நாம் நிலத்தின் மீதிருக்கும் தாவாரமூட்டம் அழிந்துபோகாமல் காப்பதில் கருத்துச் செலுத்த வேண்டும். வரட்சியைக் குறைப்பதற்காக நாம் வயலோரங்களிலும், வாய்க்கால் வரம்புகளிலும், களத்துமேட்டிலும், மற்றும் சுற்றுப்பகுதிகளிலும், இயன்ற இடங்களிலெல்லாம் ஏற்ற மரங்களை வளர்க்கலாம். கால் நடைகளைவயல்களிலும் தோட்டங்களிலும் கண்காணிப்பின்றிக் கண்டபடியே விடக் கூடாது.

### பண்ணைக்காடுகள் வளர்த்தல்

பண்ணை நிலங்களில் காடுகளை வளர்ப்பதையும் பண்ணைச் செய்கை நேர்த்திகளில் ஒன்றாகக் கொள்வது நல்லது. ஏற்கனவே கூறியதுபோல் காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கவும் வரட்சியை குறைக்கவும், பயிர்கள் காற்றின் வேகத்தில் வீழ்ந்து விடாதபடி அவ்வேகத்தைக் குறைக்கவும், பண்ணைக்காடுகள் உதவுகின்றன. நிரந்தரமாக விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களிலும் வரவு செலவுக்குக் கட்டிவராதபடி பயிர்ச் செலவாகக்கூடிய வளங்குறைந்த நிலங்களிலும் இப்படிக் காடுகளை வளர்க்கலாம். வயல்வரம்புகளில் பசுந்தழைப் பயிர்களை வளர்ப்பது பல இடங்களில் பழக்கத்தில் உள்ளது. இவ்விதப்பயிர் வேலிகளால் பல நன்மைகள் உண்டாகும். வயலுக்குள் உள்ள பயிர்களுக்கு உஷ்ணக் காற்று வீச்சுக்குறையும். கால்நடைகளும் இதர மிருகங்களும் வயலுக்குள் நுழைந்து கேடு விளைவிக்க முடியாது. பண்ணைப் பிராணிகளும் வயலில் உழைப்பவர்களுக்கும் ஓய்வெடுக்க நிழல் கிடைக்கும். வயலுக்குள் பாய்ச்சிய நீர் சீக்கிரம் வற்றாமலும் வரட்சி காணாமலும் இருக்கும். மேலும் பயிர்களை அழிக்கும் பூச்சி புழுக்களைத் தின்னும் பறவைகள் வந்து தங்குவதற்குக் கூட இந்தக் காற்றுத்தடை வேலிகள் பயன்படுகின்றன கனிமரத் தோப்புகளில் காற்றுவீசும்திக்கில் பிஞ்சுகள் பிடிப்பதில்லை. பலத்த காற்றில் தேனீக்கள் தம் வேலையைச் செய்யமுடியாததே இதற்குக் காரணம். காற்றுத்தடைகளாக மரவரிசைகள் இருந்தால் இந்தக் குறையை அகற்றலாம்.

### காற்றுத்தடைகளை அமைக்கும் முறை

காற்றுத்தடை என்று சொல்லி எப்படிவேண்டுமானாலும் மரங்களை வளர்த்துவிடக் கூடாது. அதனை முறையாக ஆராய்ந்து அமைக்காவிடில் பல தீங்குகளும் நிகழும். காற்றுத் தடைகளாக உள்ள மரங்கள் வயலுக்குள் நிழலைச் சாய்த்தால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும். பயிர்களின் வேர்களோடு காற்றுத்தடை மரவேர்கள் போட்டிபோட்டுப் பூமியின் சத்தைக் கிரகிக்க தொடங்குவதாலும் குறையும்.

தடைமரங்களை நெருக்கமாக வளர்த்தால் காற்றுச் சலனம் வயலுக்குள் கொஞ்சம் கூட இல்லாமல் போய் பூஞ்சண நோய் முதலியன பயிர்களைப் பீடிக்கலாம். மேலும் மரங்களின் அடர்த்திக்கு ஏற்றால் போல் ஈரப்பதம் வயலில்

(10ம் பக்கம் பார்க்க)

# நாடு நலம் பெற ...

# மாமரத்தின் விரோதிகள்

மாம்பழப் பருவம் விரைந்துகொண்டிருக்கின்றது.

பல மரங்கள் பூக்கும், ஆனால் எல்லாப் பூக்களும் பல மரங்களில் காய் வைக்காமல் போவதைச் சில விவசாயிகள் காணலாம். பூக்கும் காலத்தில் சில பூச்சிகள் பூக்களைக் காய்க்காமல் செய்துவிடுகின்றன.

ஜாஸிட் எனப்படும் சாம்பல் பழுப்பு நிறப் பூச்சிகள் மாவை தாக்குகின்றன. இப் பூச்சிகளில் மூன்றுவகைகள் உண்டு. மூன்றும் தாக்குகின்றன. பூக்களின் சத்தையும் இளந்தளிர்களின் சத்தையும் இவை உறிஞ்சிவிடுகின்றன. மொட்டுக்களில் முட்டையிட்டு பாழடிக்கின்றன. பூமொட்டுக்களிலும் இளம் குருத்துக்களிலும் மலங்கழித்து வருவதால் மலங்களில் கரி போன்ற பூஞ்சணம் உண்டாகிறது. இவை மொட்டுக்கள் மலரும்போது தாக்கும். தை, மாசியில் பூக்களுக்கு அதிக நஷ்டம் வருகிறது.

சாம்பல் வண்டு மாவுக்கு விரோதி. பூத்தண்டுகளில் இது ஒட்டிக்கொண்டு, இளம் தளிர்களின் நடுநரம்புகளில் உட்கார்ந்து கொண்டும், இளங் குருத்துக்களில் இருந்து கொண்டும் சத்தை உறிஞ்சி விடும். பாதிக்கப்பட்டபூக்கள், இலைகள், குருத்துக்கள் மடிகின்றன. தத்துப்பூச்சிபோல இதுவும் மலங்கழிததுப் பூஞ்சணம் உண்டாகச் செய்யும். தை முதல் சித்திரை வரை இவை தாக்குகின்றன. சித்திரை, வைகாசியில் வேரடியில் மண்ணில் முட்டைகளை இடுகின்றன. முட்டையை விட்டு வெளி வந்த குஞ்சுகள் மேலே ஏறுகின்றன.

பூஞ்சணம் வேறு ஒரு விரோதி. தத்துப்பூச்சி வரும் போது இதுவும் தோன்றும். பூ, மொட்டு, இலைக் கக்கம், தண்டு எதையும் தாக்குகிறது இது. இதனால் பூஞ்சணம் உண்டாகிறது. பூஞ்சணம் பிறகு பொடியாகிறது. தாக்கப்பட்ட பூக்கள் மலருவதில்லை. பிஞ்சுகள் உதிருகின்றன.

தத்துப்பூச்சியைத் தடுக்க 0. 16 அல்லது 0. 25 சத டி. டி. ரி. அடிக்கவேண்டும். நனையக் கூடிய டி. டி. ரி. பவுடரில் ஒரு இருத்தல் எடுத்துக்கொண்டு அதை 20 லிருந்து 30 கலன் தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும். என்மரின் அல்லது 20 சதம் இஸியையும் (பாராதியான்) பயன்படுத்தலாம். அவுன்ஸ் மருந்தை 4 கலன் தண்ணீரில் கலந்து கொள்ளவேண்டும். பூக்கள் மலர்ந்ததும் ஒரு தடவை மருந்தடித்தால் பூக்களைக் கட்டுப்படுத்தப் போதுமானது.

### சாம்பல் வண்டுகள்

சாம்பல்வண்டுகளைக் கட்டுப்படுத்த மரத்தைச் சுற்றிச் சுற்றுப் புறங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும். செப்டம்பர் வரை மண்ணைக் கிளறிவிடவும். இப்படிச்செய்வதால் மண்ணில் உள்ள முட்டைகள் புரட்டிவிடப்பட்டு நாசமாகின்றன. பூச்சிகள் மரத்தின் மீது ஏறுமலிருக்கத் தரைக்கு மேல் இரண்டு மூன்றடி உயரத்தில் அடிமரத்தைச்சுற்றிப் பிசுக்கு மருந்தை (2 அங்குல அகலம் × 1/8 அங்குலப்பருமன்) அடித்தல் நல்லது.

மரத்தடியில் பட்டை பூசப் பிசின் மருந்து கிடைக்கவில்லையென்றால் மரத்தடியைச் சுற்றி 5 சத அல்மரீன் தூவலாம். அல்லது 3 கலன் தண்ணீரில் 1 அவுன்ஸ் 20 சத டையல்டிரீன் கரைத்துக்கொண்டு அடிமரத்தில் படும்படியும், மரத்தடியைச்சுற்றியும் அடிக்கலாம்.

வண்டுகள் மரத்தில் ஏறிவிட்டிருந்தால் மலாதியான் (0. 05 சதம்) அடிக்கவும். மரம் ஒன்றுக்கு மூன்றிலிருந்து நான்கு கலன் மருந்து அடிக்கவும்.

பொடிப்பூஞ்சணம் வராமலிருக்க மரத்துக்குச் சன்னமாகப் பொடி செய்த (250-350 மெஷ்) கந்தகத்தைத் தூவவேண்டும். அல்லது கரையக்கூடிய ஒரு இருத்தல் கந்தகத்தை30கலன் தண்ணீரில் கலந்துகொண்டு அடிக்கவும். தத்துப் பூச்சியும், பூஞ்சணமும் சேர்ந்தே உண்டாவதால் இரண்டுக்கும் மருந்தை ஒரே தடவையில் அடிக்கலாம்.

நோய்ப் பூச்சிகள் வரும்வரையில் காத்திராமல் முன் ஜாக்கிரதையாக மருந்தடிப்பது சிறந்தது. மருந்தடிப்பதில் கடினங்கள் தென்பட்டால் விஸ்தரிப்பு அதிகாரிகளைக் கண்டு உதவி நாடவும்.

# உலகிற்கு சூரியன் வழங்கும் வற்றாத விசைச் செல்வம்

பூமியில் காணப்படும் எல்லா உயிர்களுக்கும் ஆதிகாலம் முதற்கொண்டு ஆதாரமாய் சூரிய சக்தி இருந்துவருகிறது. பூமியிலிருந்து சூரியன் திடீரென்று மறைக்கப்பட்டால் சில தினங்களுக்குள்ளேயே எல்லா உயிர்களும் மறைந்துவிடும்.

ஒவ்வொரு தினமும் சூரியனிலிருந்து நாம் பெறும் சக்தியின் அளவு, உலகிலுள்ள மக்கள் 24 மணி நேரமும உபயோகிக்கும் மின் விசையைவிட 32,000 மடங்கு அதிகமாகும்.

சூரியசக்தியை உபயோகிக்க முயற்சிக்கும் விஞ்ஞானிகளுக்கு, பாஸில் (பழம்பொருள் படிவ) எரிபொருள்களான எண்ணெய், வாயு, நிலக்கரி ஆகியவை குறிப்பிட்ட காலத்தில் தீர்ந்துவிடும் என்பது நன்கு தெரியும். மனிதனுடைய நீண்டகால விசைத் தேவைக்கு அணுசக்திகூடப் பயனில்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ஏனெனில் அணுசக்தி மூலப்பொருளான யுரேனியம் தீர்ந்துவிடக்கூடியது.

இயற்கையின் மூலம் கிடைக்கும் இவ்வகையான விசையின் மூலாதாரங்களை லட்சக்கணக்கான வருடங்களுக்கு மனிதன் உபயோகிக்க முடியும். ஆனால் அவற்றைத் திரும்ப ஈடுசெய்ய முடியாது. இறுதியில் உலகமானது மற்ற விசை மூலாதாரங்களைத் தான் நம்பியிருக்க வேண்டும். இவ்வுலகில் உயிருள்ளவரை சூரியசக்தி மனிதனுக்கு பயன்படும் என்பதனால், 30 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர் சூரிய கிரணங்களைச் சிக்கன முறையில் கருவியில் தேக்கி வைத்து, பின் வேலைகளுக்குப் பயன்படுத்த முயன்றுவருகிறார்கள்.

## சூரிய அடுப்பு

வளைந்த பிரதிபலிக்கும் சாதனத்தின் மூலம் சூரிய கிரணங்களை குவியச்செய்து அதனால் ஏற்படும் உஷ்ணத்தினால் குடும்பத்திற்கு வேண்டிய உணவைத் தயாரிக்கலாம் என்று இந்தியாவில் சூரிய அடுப்பை உபயோகித்துக் காட்டி உள்ளனர். இந்தியக் கிராமங்களுக்கு மலிவான விலையில் சூரியஅடுப்புகள் கிடைக்கும்படி செய்தால் கிராமவாசிகள் வழக்கமாக உபயோகிக்கும் பசுவின் உலர்ந்த சாணம் மிச்சமாகி உரமாகப் பயன்படும்.

அமெரிக்காவில் சூரிய சக்தியை உபயோகிக்க வழிகளையும், கருவிகளையும் கண்டுபிடித்துள்ளனர். அங்கு இருவகையான சூரிய அடுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒன்றில் எளிதான பிரதிபலிக்கும் சாதனம் உள்ளது; இதனால் சூரிய கிரணங்களை, சமையல் செய்யும் பாத்திரத்தில் குவியச் செய்ய முடிகிறது. மற்றொன்று சூரிய அடுப்பு. கண்ணாடிஜன்னலுடன் காப்பிடப்பட்ட (இன்ஸுலேட்) உலோகப் பெட்டி ஒன்று உண்டு. இதைச் சுற்றிலும் சூரிய கிரணங்களைப் பிரதிபலிக்கும் சாதனம் உள்ளது. 200 டிகிரி சென்டிகிரேட் வரை உஷ்ணம் உண்டாகிறது. சாதாரண அடுப்பில் போன்று இதில் ரொட்டிசுட முடியும்.

சூரிய உஷ்ணத்திலிருந்து குறைந்த செலவில் மின்சார உற்பத்தி செய்வதற்கான திசையில் இப்போது ஆராய்ச்சி திரும்பியுள்ளது. சூரிய உஷ்ணத்தைத் தேக்கிச் சேமித்து வைத்து அவசியப்படும் பொழுது உபயோகிக்க வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. மூன்றாவதாக, ஒளிச்சேர்க்கை அல்லது தாவரங்களின் மீது சூரிய வெளிச்சம் படும்பொழுது ஏற்படும் ரசாயன மாறுதல் பற்றி ஆராய்ந்து இறற்கையின் ரகசியத்தை அறியவும்முயற்சி செய்யப்படுகிறது.

## சூரிய வெப்ப ஜனனி

சூரிய வெளிச்சம் படுவதனால் தாவரங்களில் கார்ப்பன்டை - ஆக்ஸைடும் தண்ணீரும் ஒன்றுசேருகிறது; இதற்கு பச்சையம் (குளோரோபில்) கிரியா ஊக்கியாகப்பயன்பட்டு பலவகைகளில் கார்போஹைடிரேட்டாக மாறுகிறது. இவையே பிறகு எரிபொருளாகப் பயன்படுகின்றன.

சூரிய வெப்பத்தைச்சேமித்து வைக்கும் கருவி சாதனங்களை அமைப்பதற்குப் பெருத்த செலவாகிறதுவிசையைஉபயோகிக்கும் நகரங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அது உடனடியாகக் கிடைக்கா விட்டாலும், சிறிய அளவில் அதை உபயோகிக்க வகை செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கூறி வருகிறார்கள்.

முதன் முதலாக விவசாயப் பண்ணைக்கும், வீட்டிற்கும் உபயோகிக்கலாம். விசைப்பற்றாக் குறையுள்ள பகுதிகளுக்கு இதைப் பின்னர் விஸ்தரிக்கலாம். இந்த விசை உற்பத்தி ஜனனிகள் மலிவாகவும், குறைந்த விசையுற்பத்தி உள்ளவையாகவும் இருக்கும். சூரிய வெளிச்சம் அதிகமுள்ள, தண்ணீர்க் கஷ்டமுள்ள இடங்களிலும் இது பெரிதும் பயன்படும்.

ஒரு பிரபல அமெரிக்கக் கம்பெனியானது, சூரிய வெப்பத்தைப்பெற பரவளையமான பிரதிபலிக்கும் சாதனத்தைச் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறது. உஷ்ணமேறியவுடன் மின் ஓட்டம் ஏற்படுகிறது. இவ்விசை ஒரு தண்ணீர்க் குழாயை இயக்கக் கூடியது. 20 அடி ஆழத்திலிருந்து 40 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கலாம்.

## சூரிய மின்கல அடுக்கு

சூரியனிலிருந்து விசையைப் பெற அமெரிக்கா நடாத்திவரும் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்கது, சூரிய மின் கல அடுக்கு ஆகும். 1954-ம் வருடத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இது பெரிய தொட்டி போன்று இருக்கும். சுத்திகரிக்கப்பட்ட சிலிக்கன் உள்ள கண்ணறையுள்ள சாதனம் நீரால் நிரப்பப்பட்டிருக்கும். இதில் ஆர்ஸனிக்கையும், போரானையும் சிறிது சேர்த்திருப்பார்கள். ஒவ்வொரு வட்டுப் போன்ற கலமும் சிறிய மின்சார உற்பத்தி ஜனனியாகும். சூரியவெளிச்சம் கண்ணறைகள் மீது பட்டதும் மின் ஓட்டம் ஏற்படுகின்றது. பசை மின் கலங்களின் மூலம் இரவில் அல்லது மப்பும் மந்தாரமுமுள்ள காலங்களில் மின்விசையைப் பெற முடிகின்றது. ஒரு கம்பத்தில் அமைக்கப்பட்ட இவ்வகையான பாட்டரி 6 மாத காலத்திற்கு ஒரு கிராம டெலிபோனை (ஜார்ஜியாவில்) இயக்க உபயோகிக்கப்பட்டது.

இது போன்ற பாட்டரிகளை சூரிய - விசை ரேடியோக்களிலும், காதுக் கருவிகளிலும் உபயோகிக்கின்றனர்.

சுத்தம் செய்யப்பட்ட சிலிக்கன் தங்கத்திற்குச் சமமான விலை மதிப்புள்ளது. வர்த்தக ரீதியில் உபயோகிக்கச் சூரிய பாட்டரிகள் மிகவும் விலையுள்ளவை. இருந்தாலும், குறைந்த பளுவுள்ள சாதனங்களை அமைக்க வேண்டிய விண்வெளிக் கப்பல்களில் விசை உற்பத்திக்கு இந்த பாட்டரிகள் பயன்படுகின்றன. எக்ஸ்புளோரர்-6 செயற்கைக் கோளத்தில் சூரிய சக்தியைப் பயன்படுத்தியே ரேடியோவையும், விஞ்ஞானத் தகவல்களைப் பூமிக்கு அனுப்பும் கருவிகளையும் இயங்கச செய்தார்கள்.

## சூரிய உலைகள்

விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்த பரிசோதனைக்கான சூரிய உலைகளை அமைக்கும் முயற்சி நடந்து வருகிறது. அமெரிக்காவில் சான்டியாகோ என்னுமிடத்தில் மிகப்பெரிய சூரிய உலை அமைக்கப்பட்டுள்ளது. அதில் வளைவான அலுமினிய ஆடி ஒன்று சூரிய கிரணங்களைக் குவிமையத்திற்குச் செலுத்துகின்றது.

நடுப்பகலில் இந்த உலையானது 4000 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணத்தை எட்டுகிறது. சில உருக்கு ஆணியை இந்த உஷ்ணம் உருகச்செய்யக்கூடும். சூரிய உலையிலிருந்து அதிக உஷ்ணத்தைப் பெறலாம். தொழிற்சாலைகளிலுள்ள மற்ற உலைகளைப் போன்று, எரிபொருள்களினால் அசுத்தத்தன்மை ஏற்படுவதில்லை. ஆகவே ஆராய்ச்சி நடத்தும் கருவிகளுக்கு மிகவும் பயன்படக் கூடியது.

சூரிய அடுப்பு, சூரியஜனனி, சூரியபாட்டரி, சூரிய உலை ஆகியவற்றின் மூலம் அதிக வசதிகளை அடைய முடியும் என்றாலும் உப்பு நீரைக் குடிதண்ணீராக மாற்றும் சூரிய ஆலை மிகப் பயன்படக் கூடியது என்று கூறலாம்.

சூரியனிலிருந்து நாம் இவ்வாறு எல்லையில்லாத செல்வத்தைப் பெறுகிறோம். ஆனால் இதில் 60 சத விகிததைக்கூட நாம் பயன்படுத்த முடியவில்லை. பெரும்பாலான சக்தி பூமியைச் சுற்றிலுமுள்ள மேகங்களினால் கிரகிக்கப்படுகின்றன. இவ்வாறு வீணாகும் சக்தியையும் தவிர்க்கும் வழிகளைக் கண்டுபிடித்து, அதைத் தேக்கி வைக்கலாம் என்று இப்பொழுது விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். அப்பொழுது அணு சக்தியையும் விட, சூரியனிலிருந்து நாம் பெறும் சக்தி வருங்கால உலகில் மிகவும் முக்கியத்துவம் பெறும்.

## பரதநாட்டியக்கலை ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் என்று நினைப்பது வெறும் பகற்கனவே.

ஆதலினால்தான் சில பெற்றோர்கள் குழந்தைப்பருவத்தில் கலையார்வத்தால்தங்கள் குழந்தைகளைப் பரதநாட்டியம் ஆடச்செய்து பின் நிறுத்திவிடுகிறார்கள்.

மேற்கூறிய காரணங்களால் குடும்பப் பெண்களோ அல்லது குடும்பவாழ்க்கையில் புக இருக்கும் இளம் பெண்களோ இக்கலையில்ஈடுபடுவது பெரும்பாலும் விரும்பத்தக்கதல்ல.

அதனால் தமிழ் மக்களின் அரும்பெரும் கலைப்பொக்கிஷமான பரதநாட்டியத்தைக் கைவிடவேண்டுமென்று நான் கூறவில்லை. அதைத்தொழிலாகக் கொள்ளக்கூடிய சிலரால் மட்டும் தான் அக் கலையை வளர்க்கமுடியும்.

## விவசாயத்துறையில்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தங்குமாதலால் நைப்பு அதிகமான பிரதேசங்களில் இந்தத் தடைகள் தீங்காதலும் உண்டு. எனவே இவற்றை மனதில் கொண்டு காற்றுத் தடைகள் எந்த அளவில் எவ்விதம் இருக்கவேண்டுமென்று ஆராய்ந்து அமைக்கவேண்டும்.

காற்றுவீசும் ஒரு திக்கில் மட்டும் தடைகளை அடைக்கலாம். அடர்த்தியில்லாமல் அமைக்கலாம். வயலின் உள் விளிம்பில் நிழல்விழும் ஒரு சிறிது தூரத்திற்குப் பயிர்கள் இல்லாதபடி இடம்விட்டுவிடுவதும் சிறந்ததாகும். காற்று அதிகமாக வீசும் இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவரிகளை காற்றுவீசும் திக்கில் அமைக்கவும் செய்யலாம். இப்படியெல்லாம் காற்று வீச்சைச் சமப்படுத்தினால் விவசாய உற்பத்தியைப் பன்மடங்கு உயர்த்த முடியும்.




ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சிக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானால், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ரான்ட்ஸ்

எஸன்ஸ் ஒப் சிக்கன்

# சிறுவர் பூங்கா

## பந்தயமும் பரிசும்

— டி. எஸ். பரமேஸ்வரன் —

"சரோ, 'முல்லை' பத்திரிகை சிறுகதைப் போட்டி ஒன்று நடாத்துகின்றதாம். நீ பங்குபற்றவில்லையா" என்றவாறே பிரேமா அப்பொழுது தனது வழமையான அரட்டையை ஆரம்பித்துக் கொண்டாள்.

"உண்மையா, பிரேமா? நானு எழுதாமல் விடுவேன். ஆனால் ஒன்று, எழுதுமுன்னரே சொல்லி விடுகிறேன். எனக்குத்தான் பரிசு".

"என்ன சரோ, இப்பொழுதே நீ தொடங்கி விட்டாய் வீரம் பேச. உனக்குத் தெரியாது, இப்படிப் பேசபவர்கள் இறுதியில் தலை குப்புறத்தான் விழவேண்டும்"

"உனக்கேன் ஆத்திரம்? அப்படியென்றால் பந்தயம் பிடிப்போமா? நான் பரிசு எடுத்தால் நீ பத்து ரூபா தர வேணும்"

"சரி, நான் எடுத்தால் நீ பத்து ரூபா ......"

"ஓ தாராளமாக. ஆனால், நீ பரிசு எடுத்தால் தானே?"

இப்படியே போட்டியில் ஆரம்பித்த இவர்களின் பேச்சு 'போட்டியில் ஓர் போட்டியாக' முடிந்தது. இருவரும் வீடு சென்று அந்தச் சிறுகதைப் போட்டிக்கு எழுத முயற்சிகள் எடுத்துக் கொண்டனர்.

சரோஜினி இயற்கையிலே வாய்ப்பேச்சில் வல்லமைக்காரி. எதிலும் 'நான் தான் கெட்டிக்காரி' என்று வாய்ப்பந்தல் போட்டுவிடுவாள். செயல் எல்லாம் அப்புறம்தான். இங்கும் இதுபோலவேதான் பந்தயத்தை ஆரம்பித்து விட்டாள். இப்போ வீட்டிலே போய் கதையை எழுத அமர்ந்தாள். கற்பனையோ வரமாட்டேனென்றது. சிந்தித்துப் பார்த்தாள். மனதைக்குழப்பியடித்தாள். எதுவும் முடியவில்லை. சடுதியாக ஒரு முடிவுக்கு வந்தாள். பழைய புத்தகங்கள் மிக்கவுள்ள அலுமாரிக்குள் ஏதோ தேடினாள். எப்பொழுதோ வெளிவந்த ஒரு சஞ்சிகையை எடுத்தாள். அதில் ஒரு பரிசுக் கதை வெளிவந்திருந்ததைக் கண்டதும், அதையே தனது பெயரில் எழுதினால் என்ன என்று யோசித்துப் பார்த்தாள். சரியென்று பட்டது. உடனேயே அந்தக் கதையின் தலைப்பையும் பாத்திரங்களின் பெயர்களையும் மாற்றி, தனது நடையில் எழுதினாள். முடிவு திகதிக்குள் கதையை அனுப்பியும் விட்டாள்.

பின், சிலவேளை அவள் தன் செயலை நினைத்துப் பயப்படுவதுமுண்டு. 'இதை யார் கண்டுபிடிக்கப் போகின்றார்கள். எனக்குத்தான் பரிசு' என்று மனதைத் தேற்றிக் கொள்வாள்.

ஆனால் பிரேமா மட்டும்நன்குக் கற்பனை செய்து அருமையாக ஒரு கதையைப் படைத்தாள். அவள் ஏற்கனவே பல பரிசுகள் பெற்றுவிட்டதிலிருந்து அவள் திறமையை அனைவரும் அறிவர்.

இருவரும் கதைகள் அனுப்பி நாட்கள் பல பறந்து விட்டன.

முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர்கள் இருவரும் "எனக்குத் தான் பரிசு-இல்லை, எனக்கு", என்று தமக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். - நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் உற்சாகமும் ஆவலும் கூடிக் கொண்டே சென்றது.

அன்றுதான் போட்டி முடிவுகள் வெளிவரும் நாள்- பிரேமா, 'முடிவுகள் தபாலில் வீட்டுக்கு வரும் தானே-நேரம் போனாலும் பள்ளிக்கு இன்று தாமதித்துச் செல்வது' என்று எண்ணி வீட்டிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"பிரேமா, இன்று உனது அண்ணன் கொழும்பிலிருந்து வருகிறான் அல்லவா? உனது போட்டியை நடாத்திய பத்திரிகைக்காரர்கட்கு அருகில் இருக்கும் அவனுக்குச் சில நேரம் போட்டி முடிவுகள் தெரியலாம் அல்லவா?" என்று பிரேமாவின் அன்னை சொல்லிக்கொண்டிருக்கும் போதே "பிரேமாவுக்கு வெற்றி - வெற்றி!" என்று சிரித்தவாறு கூறிக்கொண்டே காரில் வந்து கொண்டிருந்தான் பிரேமாவின் அண்ணன் பரம்.

"அம்மா கூறியது சரியாய்ப் போயிற்று" என்று துள்ளிக் குதித்தாள் பிரேமா.

"பிரேமா 'முல்லை' சிறுகதைப் போட்டியில் உனக்குத்தான் முதற்பரிசு கிடைத்திருக்கின்றது. முல்லை ஆசிரியர் உன்னைப்பற்றி நிறையச் சொன்னார். இதோ போட்டி முடிவுகள் கொண்ட முல்லை இதழ். இதை அறிந்ததும் உனக்குப் பெரிய பரிசுகள் கொண்டு வந்திருக்கிறேன்" என்று ஒரு பார்சலை அவன் மேசையில் போட்ட போது ஒரு 'முல்லை' இதழும் 'சிறுகதை எழுதுவது எப்படி' என்ற நூலும் கீழே விழுந்தது.

அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டே பள்ளி நோக்கி ஓடினாள் பிரேமா. பந்தயத்தில் பத்துரூபா பரிசு கிடைக்கப் போகின்றது என்னும் பெருமை அவளுக்கு.

பள்ளி செல்லும் வழியில் சரோஜினியைக் கண்டாள். தான் பரிசுபெற்ற எதையும் எடுத்தவுடன் அவள் சொல்லாமல், மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். பள்ளியில் எல்லாத் தோழியர்கட்கும் மத்தியில் அவளை அவமானப்படுத்த வேண்டும் என பிரேமா விரும்பினாள்.

அவர்கள் பள்ளி செல்வதற்கு தபால் கந்தோரை தாண்டவேண்டும் - தபாற் கந்தோரிலிருந்து அப்போதுதான் புறப்பட்டுக் கொண்டிருந்த தபாற்காரன் "நீங்கள் தானே மாணிக்கவாசகர் மகள் சரோஜினி" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

அந்தக் கடிதம் 'முல்லை' பத்திரிகையிலிருந்து வந்தது என்று கண்டதும் சரோஜினி துள்ளிக்குதித்தாள்.

"பிரேமா, பார்த்தாயா எனக்குத்தானே பரிசு - கெதியாகப் பத்து ரூபா ஆயத்தப்படுத்து" என்றவாறே சரோ கடிதத்தைப் பிரித்தாள். பிரேமாவுக்கும் ஆச்சரியம், ஏன் இந்த கடிதம் என்று.

"அன்புள்ள தங்கை
சரோஜினிக்கு,
நமது சிறுகதைப் போட்டியில் உங்களுக்குத்தான் முதற்பரிசு ... "

அந்த வரியை படித்து முடிக்கு முன்னரேயே சரோஜினி மகிழ்ச்சியினால் துள்ளிக் குதித்தாள். தொடர்ந்து படித்தாள்.

"... கொடுப்பது என்று தீர்மானித்தோம் - ஆனால், உங்கள் கதை காப்பிக்கதை என பின்னர் தான் கண்டுபிடிக்கப் பட்டது. கேவலம், எழுத ஆசைப்படும் உங்களைப் போன்ற இளையோர் இப்படிக் காப்பியடிப்பது ஆகாது. இனி காப்பியடிக்காது நன்றாக எழுதி முன்னேறுமாறு வேண்டுகின்றேன்.

— முல்லை ஆசிரியர்"

கடிதத்தைப் படித்து முடிக்க முன்னரேயே சரோஜினியின் முகத்தில் பேயறைந்ததுபோலவிருந்தது.

"பார்த்தாயா சரோ, யாருக்குப் பரிசு என்று. எப்பொழுதும் பெருமை பேசக்கூடாது. எடு பந்தயக்காசை இதோ சிறுகதை எழுதுவது பற்றிய இந்தப் புத்தகதை படித்துப் பார்த்து முன்னேறு. கேலி, வீம்பு, பரிகாசம், தற்பெருமை இதை இன்றோடு ஒழித்துக் கொள்" என்று பிரேமா சொல்லி முடிப்பதற்குள் சரோஜினி மூர்ச்சைபோட்டுவிழுந்து விடுவாள் போலிருந்தது.

### கேள்வி-பதில்

ஆசிரியர்: எட்டுப் பேர் ஐந்து நாட்களில் ஓர் வேலையைச் செய்து முடித்தால், மூன்றுபேர் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

மாவணன்: எட்டுப் பேரும் சேர்ந்து அவ்வேலையை ஏற்கனவே செய்து முடித்து விட்டார்களே, சார்!

அனுப்பியவர்:
—ம. முருகவேள்
நாரந்தனை.

## ஈழப்பாட்டனின் . . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்நாளன்று நடந்த சம்பவங்கள் "திரைமறைவுத்திட்டங்கள்" பற்றிய விபரங்களை அவர் உரியவர்களிடமிருந்து அறிந்திருக்கவேண்டும். இவ்வாறு சுதந்திர இலங்கையின் முதலாவது கவர்னர் ஜெனரலாக அரங்கேற்றப்பட்டார் சேர் ஒலிவர் குணத்திலக்கா.

கேளுங்கள் ஹறீன், எனது அடுத்த கடிதத்தில் அந்த உயர்ந்த பதவியை அடைந்த ஒலிவர் குணத்திலக்கா எவ்வாறு தனது மிகப் பெரிய பொறுப்புகளை வகித்தார்—சேவைபுரிந்தார் என்பவற்றை விரித்துரைப்பேன்.

பொது வாழவில் கண்ணியமும், பெருங் குணமும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், சகிப்புத் தன்மையும், தயாள போக்கும் அவசியம் வேண்டும். 'நல்லபிள்ளை'ப் பட்டம் பெற்றிட வேண்டும் என்னும் நயவஞ்சக நோக்கம் ஒரு போதும் கூடாது. பழிக்குப் பழிவாங்கும் மனநிலை பாதகமானது. சொந்தமனச்சாட்சியிலும், தன்னாட்டு மக்களுக்குத் தான் செய்யும் கடமையிலும் சற்றும் தவறுதல் கூடாது. சத்தியவசனம், உத்தமசேவை, தன்னலம் துறந்த பொதுநலம் என்பன இன்னலைப் போக்கி இறைவனை நோக்கி எம்மை இட்டுச்செல்லும் சன்மார்க்க சாதனைகளாகும். எல்லாவற்றிலும் உயர்ந்த அரசியல் அரசநீதியும், அரசியல் தர்மமும் இவைகளாகும். தாய்நாட்டின் பெயருக்கு அந்நாட்டுப்பிரசை ஒருவனால் இழுக்கோ, அபகீர்த்தியோ ஏற்படாவண்ணம் எண்ணம், சொல், செயல் அனைத்திலும் அவன் உயர்ந்த இலட்சிய நோக்குடன் வாழப் பழகுதல் வேண்டும்.

"பெற்றதாயும்
பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும்
நனிசிறந்தனவே"

என்பது அமரகவி பாரதியாரின் அமரவாக்கியம். நாட்டின் நற்பெயரும், நவில் சிறப்பும் அந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் ஒளிவீசும் உயர்ந்த ரக ஆபரணங்கள். அவை இரு கண்களும் ஆகும்.

என்றும் தங்கள் மேல்
பட்சம் மறவாத,
அப்பா.

## நொண்டி

—வித்துவான் க. வேந்தனார்—

காலில் லாத நொண்டி மிகவும்
களைத்துப் போனான் அம்மா
கோலை ஊன்றி நடந்து முதுகு
கூனிப் போனான் அம்மா

பாவம் அந்த நொண்டி எங்கள்
பள்ளிக் கூடத் தெருவால்
போகும் போது கண்டேன் ஐயோ
புண்கள் காலில் அம்மா

இனிப்புக் கடலை வாங்கக் காசு
இனிமேல் கேட்க மாட்டேன்
தனித்த நொண்டி தவிப்பைப் போக்கத்
தாரும் அம்மா காசு

கந்தை சுற்றும் நொண்டிக் காலைக்
காட்டிப் பிச்சை கேட்கிறான்
ஐந்து சதம்நீ தந்தி டம்மா
அவனைத் தேடிப் போடுவேன்.

---

மதிப்புக்குரிய பெரியவர்களிடம் மரியாதை காட்ட வேண்டும். நம் சகோதரர்களிடம் அன்பு காட்ட வேண்டும். நம்மை விடப் பலம் குறைந்த வர்களிடம் அனுதாபம் காட்ட வேண்டும். இது தான் சிறந்த மனித இயல்பு.

அமெரிக்கஞானி
எமர்ஸன்.

## துள்ளிப்பாயும் தெள்ளுப்பூச்சியே நீ வாழ்க!

— அன்ரனி பெர்னாண்டோ —

தெள்ளுப் பூச்சி சின்னஞ்சிறிய பிராணி. அது துள்ளி வந்து உதிரத்தை உறிஞ்சி வலியுண்டாக்கும் வரை அது நமது தேகத்தில் எழுந்தருளியிருப்பது தெரியவே தெரியாது. நமது தேகத்திலும், மற்றப் பிராணிகளின் தேகத்திலும் உள்ள இரத்தத்தை விருந்தாக உண்டு களிப்புடன் வாழ்கிறது தெள்ளுப் பூச்சி.

உலக நாடுகள் எங்கும் தெளுப் பூச்சிகள் துள்ளித் திரிகின்றன. உலக வலம்வரும் செயற்கைக் கிரகங்களைப்பற்றி அறியாத, கேள்விப்படாத மக்கள் கூடத் தெள்ளுப் பூச்சியை அறிவர். வெளியுலகச் செய்திகள் ஒன்றேனும் எட்ட முடியாத கானகத்தில் வாழும் வேடர்கள் கூட அறிவர் இந்தத் தெள்ளுப் பூச்சியை. என்னே இச் சின்னஞ்சிறு பிராணியின் பென்னம்பெரிய புகழ்!

இருநூறுஆண்டுகட்குமுன்பு, அதாவது 1758-ம் ஆண்டு சுவீடன் நாட்டு இயற்கை சாஸ்திரிகார்ள் லீனேஸ் உலகிலுள்ள பிராணிகளுக்குப் பெயரிடும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவர் தெள்ளுப் பூச்சிக்குக் கொடுத்த பட்டம் 'பியூலெக்ஸ் இரிட்டன்ஸ்'(Pulex Irritans) என்பது. இது இலத்தீன் மொழிப் பெயராகும்.

சாதி இரண்டொழிய வேறில்லை.... என்பதைத் தெள்ளுப் பூச்சி ஏற்றுக்கொள்ளாது. காரணம், தெள்ளுப் பூச்சிகள் சுமார் ஆயிரம் இனங்கள் இருப்பதாக இயற்கை சாஸ்திர வல்லுனர்கள் கணித்துள்ளனர். இவற்றுள் எல்லா இனங்களும் மனிதர்களையும், பிராணிகளையும் கடிப்பதில்லை. கடிக்கும் இனங்களில் பெரும்பகுதி மற்றப் பிராணிகளின் உடலில் வாழ்ந்து அவற்றைக் கடிக்கின்றன. குறிப்பிட்ட சிலஇனங்கள் மட்டுமே மனிதரின் தேகத்தைக் கடிக்கின்றன.

பிராணிகளின் உரோமங்கள், சிறகுகள் என்பவற்றினூடே இலகுவாகச் செல்வதற்கு ஏற்ற உடலமைப்பைத் தெள்ளுப் பூச்சிபெற்றிருக்கிறது. துள்ளிப் பாய்வதற்கு ஏற்ற வகையில் பாரமற்ற உடலையும் மூன்று சோடிக் கால்களையும் பெற்றிருக்கிறது. உதிரத்தை உறுஞ்சி உண்பதற்கு ஏற்றஉறுப்பும் இதன் தலையில் உண்டு.

தெள்ளுப் பூச்சி ஒரே பிராணியில் நிரந்தரமாக இருப்பதில்லை. ஒன்றிலிருந்துமற்றொன்றுக்கு மாறிச் செல்லும். இரத்தத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள கட்டித் தன்மையை நீக்குவதற்கு ஒருவகைத் திரவத்தை தேகததில் உட்செலுத்தி, அதன்பின்னரே உறிஞ்சிக் குடிக்கிறது. பேராசையுள்ள தெள்ளு பலமுறை தேகத்தைத் துளைத்துப் பெருந்தொகையான இரத்தத்தைக் குடிக்கிறது. தேவைக்கும் அதிகமான இரத்தத்தைக் குடிக்கும் இது சாதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு முறையேகுடிக்கிறது. அதுதேகத்தில் துளைத்த இடம் தாங்கமுடியாதவாறு சொறியவாரம்பிக்கும்.

தெளுப் பூச்சி வெளிச்சத்தை வெறுக்கிறது. இருளில் இருப்பதையே பெரிதும் விரும்புகிறது. உஷ்ணத்தை விரும்பும் தன்மையும் இதனிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது.

துள்ளிப் பாயும் தெள்ளுப் பூச்சியே பெரும் புகழோடு நீ நீடூழி வாழ்க! ஆனால், தயவு செய்துஎம்மைமட்டும்கடித்துத் துன்புறுத்தாதே!

# தொழில் நுட்ப அறிவுபெற்றோர் வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, வெள்ளி

வைத்திய, தொழில் நுட்ப, பொறியியல் அறிவுபெற்ற அதிகாரிகள் இலங்கையை விட்டு வெளியேறி வேறு தேசங்களில் வேலை ஏற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அரசாங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானம் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரப் பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையைவிட்டு வெளிச்செல்ல அனுமதியளிக்கும் பொறுப்பு இவ்விலாகாவைச் சேர்ந்ததாகும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள வைத்திய, பொறியியல் நுண்ணியல்நிபுணர்களின் தட்டுப்பாட்டைத் தடுப்பதற்காகவே, இவ் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விதிகள் மிகவும் கவனமாகக் கவனிக்கப்படுமென்று தனிநபரொருவருக்கோ, அன்றேல் குறிப்பிட்ட சிலருக்கோ இவ்விதியிலிருந்து விலக்களிக்கப்படமாட்டாதென அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது.

தராதரமுடையவர்களுக்கு மேற்கூறியவிதி செல்லுபடியாகும். வெளிநாட்டிலே வேலை கிடைத்துள்ளதுஎன அத்தாட்சியுடனே நிரூபித்தாலும் வைத்திய, பொறியியல் தொழிலாளர்கள் வெளியேசெல்ல அனுமதிக்கமாட்டார்கள். அரசாங்கம் இதுவிஷயமாக சில வெளிநாடுகளுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டது.

## பூஜ்யம் தபால்

(6ம் பக்கத் தொடர்ச்சி)


ளீர்கள். இந்த நல்லுறவும், நல்லெண்ணமும் இரு நாடுகளின் பிரச்னைகளையும் சுமுகமாகத்தீரவும், உரிமை இழந்து வாழும் மக்களுக்கு மனிதஉரிமைகள் கிடைக்கவும் உதவவேண்டும். தாங்கள் சீக்கிரத்தில் எங்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென இப்போதே அன்புடன் அழைக்கின்றேன். யாழ்ப்பாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும், மலைநாட்டையும் மறந்துவிட மாட்டீர்களென்றே நம்புகிறோம்.

"பூ"


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்

எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா

பத்மினி பிரியதரிசனி

நடித்த

இரத்தினபுரி இளவரசி

டைரக்ஷன்: ராமண்ணா

5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 திரைகளில்

சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,

நடித்த

பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி

நடித்த

அனார்கலி


## இளம்பிள்ளை வாதநோய் அபாயம் நீங்கவில்லை

கொழும்பு, வெள்ளி

இளம்பிள்ளை வாதநோய் தொற்றுகின்ற அபாயகரமான நிலை இன்னும் நீங்கவில்லையென சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

எப்ரல் மாதத்தில் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் தொகை, அதற்கு முன்னைய மாதத்திலும் பார்க்கக் கூடியதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 460 பேர்களில் இன்னும் 100 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். நாடு முழுவதி 600 பேர் இந் நோயினால்பாதிக்கப்பட்டுள்ளார்களெனக்கணிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இந்நோய் வராது பாதுகாத்துக் கொள்ளும்படி வேண்டபபடுகின்றனர். இலங்கையில் தற்பொழுது இறக்குமதிசெய்யப்பட்டிருக்கும் மருந்து 3 மாதத்திற்குள் பாவிக்கப்படவேண்டுமாகையால் உடனடியாகத் தங்கள் பிள்ளைகளுக்கு இம் மருந்தைக் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர். பாடசாலையிலும் இம் மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# அங்கரனோயா தோட்டத்தில் வேலை நிறுத்த 'நோட்டீஸ்'

நாவலப்பிட்டி, வெள்ளி.

நாவலப்பிட்டியிலுள்ள அங்கரனோயா தோட்டத்தில் இம்மாதம் 21-ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்வதற்கான முன்னறிவித்தல் நோட்டீஸ் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் அங்கத்தினர் 300 பேர் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது.

வேலைநிறுத்த நோட்டீஸில் தெரிவித்திருக்கும் காரணங்கள் பின்வருமாறு:–

தோட்டக் கண்டக்டர் திரு. சி. முருகையா பிரஸ்தாப தோட்டத்தில் தொழிற்சங்க யூனியனை நசுக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். வயது வந்த பிள்ளைகளை வேலைக்குப் பதிய வேண்டும். கொந்தராத்து ரேட் 12 ரூபா வீதம் கொடுக்க வேண்டும். லயம் திருத்திச் செய்ய வேண்டும். குழாய் மூலம் தண்ணீர் வசதி வேண்டும். கே. எஸ். குமாரசாமி கங்காணியின் வேலைநிறுத்த நோட்டீஸ் வாபஸ் பெறவேண்டும். இம் மாதம் 3-ம் திகதி வேலை செய்த 25 பேருக்கு பெயர் பதிவு போடவேண்டும். பிள்ளைகள் பராமரிக்கும் விடுதி வேண்டும். ஆயாவும் வேண்டும்.

இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் இப்பிரச்னைகள் சமரசமாகத் தீர்க்காவிடில் 21-ம் திகதி வேலைநிறுத்தம் செய்வதென குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# பெண் பார்க்கும் படலம்!

— க. க. —

முன்பெல்லாம் 'காற் சட்டைக்கார மாப்பிள்ளைகளைத்தான் கல்யாணம் பண்ணுவேன்' என்று கன்னியர்கள் பிடிவாதமாக இருந்தார்கள்.

இதனால் பெண்ணைப் பெற்றவர்கள் காற்சட்டைகளைத் தேடி (டெயிலரிடமல்ல) நாடு நகரமெல்லாம் ஏழு செருப்புத்தேய அலைந்தனர்!

இப்பொழுது நிலைமை வேறு மாதிரி மாறிவிட்டது! எல்லோருமே காற்சட்டை அணியத் தொடங்கிவிட்டார்கள் என்பதை சேலை கட்டிய சேயிழைமாதர்கள் எப்படியோ தெரிந்து கொண்டுவிட்டனர்!

தன்னை மணக்கும் மாப்பிள்ளை ஒரு கார் அல்லது குறைந்தபட்சம் ஒரு மோட்டார் சைக்கிளாவது வைத்திருக்கவேண்டும் என்ற விதியை இப்பொழுது அமுல் நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள் நம் வனிதையர்கள் என்பது பிரபல தரகர்களின் அபிப்பிராயம்.

கமலநாதன் இதை அறியாதவனல்ல. மடிப்புக் குலையாத சட்டையுடன் அவன் சென்றபோது மாடிப்படியில் நின்ற மங்கை ஒருத்தியை ஒருமுறை கண்டான். இவன் கண்டான்; ஆனால் அவள் கண்டாளா? நமக்கு மட்டுமல்ல, இந்தக் கேள்விக்கு அவனுக்கே விடை தெரியவில்லை. இதன் பின்னர்தான் மேற் சொன்ன விதி அவன் நினைவுக்கு வந்தது! 'வாகனமில்லாத வாலிபனைக் காதலனாக்க கன்னி விரும்பாள்' என்று யாரோ ஒருவன் எப்போதோ சொல்லியதன் உண்மையைக் கமலநாதன் உணர்ந்தான்.

'ஆபத்சகாயா' ......

யாரது, கமலநாதனா? என்ன, என் வீட்டுக்கு இன்று! இல்லை, எப்படித்தான் என் வீடு உனக்குத் தெரிந்தது?,–தன் வீடு தேடி வந்த கமலநாதனின் கூக்குரலுக்கு அவன் சிநேகிதனான ஆபத்சகாயன் இப்படியொரு கேள்வியைக் கேட்டான்.

'அது கிடக்கட்டும், உன்னிடம் இருக்கிறதே அந்த மோட்டார் சைக்கிள், அதை இரண்டு நாளைக்கு என்னிடம் தரவேண்டும். 'பெட்ரோல்'என் கணக்கு' எடுத்த எடுப்பிலேயே ஆபத்சகாயனின் வீடுவந்த விஷயத்தை விளக்கினான் கமலநாதன்.

சகாயம் வாயைப் பொத்திக் கொண்டே சிரித்தான். 'என்ன சிரிக்கிறாய்? மோட்டார் சைக்கிளில் நான் ஓடமாட்டேன் என நினைக்கிறாயா? ஆறு மாத காலமாக எனது ஓயாத வேலை இது தானே! எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டம் தண்ணீர் பட்ட பாடாக்கும்! அதில் உனக்குச் சந்தேகம் வேண்டாம். சேதம் ஏற்பட்டால், இதோ இந்த சங்கிலி' கழுத்தில் போட்டிருந்த மைனர்சங்கிலியைக்கழற்றப்போன கமலநாதனைத் தடுத்தான் சகாயம். 'அட இதுக்கெல்லாம் போய் தங்கச் சங்கிலியைக் கழற்றுகிறாயே. இதோ திறப்பு. எடுத்துக் கொண்டு போ' எனவிடை கொடுத்தான் கமலநாதனின் நண்பன்.

விறுவிறு என்று மோட்டார் சைக்கிளை வெளியே எடுத்து வந்தான். இரண்டு உதையுடன் 'ஸ்டாட்' ஆகிவிட்டது மோட்டார் சைக்கிள்.

மாலை நேரம் முன் வீட்டிலிருந்து தன்னைக் கண்டதும் பின் திரும்பும் பெண் இன்றுதன் மோட்டார் சைக்கிளையும் ஓட்டத்தையும் கண்டு திகைத்துப் போய்விடுவாள் என்ற நினைவு அவனைப் பூரிப்படையச் செய்தது. உடல் முற்றும் ஒரு புதிய உற்சாகம். கையில் ஒரு புதிய தெம்பு, ஓட்டத்தைக்கூட்டியது.

'கடற்கரைக்குத்தான் அவள் சென்றிருப்பாள்' — திடமாக அவன் தனக்குள் கூறிக் கொண்டான். முடுக்கிவிட்டான் மோட்டார் சைக்கிளை. கமலநாதன் காதலியைச் சந்திக்கப் போகிறான் என்பது பற்றி மோட்டார் சைக்கிளுக்குத் தெரியுமா? முன் வந்த வேலியொன்றுடன் சென்று படார் என்ற சப்தத்துடன் முட்டி மோதியது. திடீர் தாக்குதலால் திசை தடுமாறி ஒரு பக்கத்தில் போய் விழுந்தான் கமலநாதன். விழுந்தானென்றா சொன்னேன்? ஐயையோ...... ஸ்தலத்தில் ஒரேசனக்கூட்டம்! மோட்டார் சைக்கிளை கராச்சுக்கும் கமலநாதனை ஆஸ்பத்திரிக்கும் அங்கு வந்து சேர்ந்த சில நல்லவர்கள் எடுத்துச் சென்றனர்.

'அம்மா, எங்கள் முன் வீட்டிலே கமலநாதன் என்றொருவர் இருந்தாரல்லவா, அவர் மோட்டர் சைக்கிள் 'ஆக்ஸிடெண்டில்' அகப்பட்டு நல்ல காயமாம்'—கமலநாதன் இது காறும் கண்ணிவைத்திருந்த கன்னி, தாயிடம் இரக்கம் கலந்த குரலில் கூறினாள்.

'அடடா, பாவம். நல்ல பெடியனுக்கேன் இந்த மோட்டு வேலை' - அனுதாபம் தெரிவித்தாள் தாய்.

மறுநாள் மாலை ...

'கட்டிலை விட்டெழுந்திருக்கக் கூடாது.'

'யார் சொன்னது அப்படி? கால்களே இல்லாவிட்டாலும் என் எதிர்வீட்டு ரோஜாவைச் சென்று பார்த்தே தீருவேன். இதை யாரும் தடுக்க முடியாது....'

ஆஸ்பத்திரிக் கட்டிலின் பக்கத்தில் அப்பொழுது தான் வந்து சேர்ந்த எதிர்வீட்டு இளம்பெண் ஏனோ தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'பாவம், நல்ல காயம்' - பக்கத்தே நின்ற தாய்க்கு அவளின் குரல் கேட்காதவாறு சிறிது உரத்தகுரலில் கூறினாள் அவள்.

## ஆறு பேருக்குத் தூக்குத் தண்டனை

கண்டி, வெள்ளி

கேகாலை நகரசபை அங்கத்தவரொருவரைச் சதி செய்து கொலை செய்த குற்றத்திற்காக ஆறு நபர்களுக்கு கண்டி அசைஸ் நீதிமன்றத்தில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எழுபத்தைந்து வயதுடைய கப்புறுஹாமி என்பவர் 1961 ஜூன் 24-ல் கொலை செய்யப்பட்டார். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் ஜயவர்த்தன என்பவர் கேகாலை நகரசபை அங்கத்தவராவர்.

## மலலசேகராவிற்கு அரசாங்கம் ஆதரவு தேடும்

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய நாட்டுப் பொதுசபையின் தலைவராக டாக்டர் ஜி. பி. மலலசேகராவை தேர்ந்தெடுக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் மற்றய ஐக்கிய நாட்டு அங்கத்தவர்களின் உதவியை நாடத் தீர்மானித்துள்ளது.

டாக்டர் மலலசேகராவை மற்றய நாடுகளின் உதவியைத் தற்பொழுது கோரும்படியும் பின்னர் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக இந்நாடுகளை விண்ணப்பிக்கும் என்றும் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய இரு நாட்டுப் பிரதிநிதிகளும் தேர்தலுக்கும் நிற்பார்கள் என எண்ண இடமிருந்தாலும் இதுவரையில் உத்தியோக பூர்வமாக அறிவித்திருப்பவர் இலங்கைப் பிரதிநிதியொருவரேயாவார்.

ஆதரவு தேடும் பொழுது தனித் தனி நாடுகளைக் கேட்பதென்றும் குழுவாக ஆதரவு தேடப்போவதில்லையென்றும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## வவனியாவில் இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்து

வவனியா, வெள்ளி

வவனியாவில் இளம்பிள்ளை வாதநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு வவனியா சுகாதாரக்கந்தோரிலும் பாடசாலைகள் தோறும் தடுப்பு மருந்து கொடுபடுகின்றது.

சுகாதார அதிகாரி டாக்டர் எம். ஜீவநாயகத்தின் நடவடிக்கையினாலேயே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.